விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 276 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 05 ஞாயிற்றுக்கிழமை (21.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



NORTHERN UNI
EXPERIENCE. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-3929)
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807


## ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பேன்

### பிரசாரக் கூட்டத்தில் விஜய்



(நாகப்பட்டினம்)

இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதும் அவர்களது கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் எமது கடமை எனத் தமிழக வெற்றிக் 23ஆம் பக்கம் பார்க்க


## பேராசிரியராக பிரதீபராஜா பதவி உயர்வு



23ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## எஜமானைக் காண வந்த நாயால் நெகிழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் தனது எஜமானை அவரது வளர்ப்பு நாய் திடீரென நேரடியா 23ஆம் பக்கம் பார்க்க

### - அநுர அரசாங்கத்துக்கு எதிராக -

# அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்

### ஐ.தே.க விழாவில் ரணில் தெரிவிப்பு



*(கொழும்பு)*

அநுர அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் புதன்கிழமை

## ஜனாதிபதி அநுர ஐ.நாவில் உரை

(கொழும்பு)

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 79ஆவது கூட்டத் தொடரில் எதிர்வரும் புதன்கிழமை 23ஆம் பக்கம் பார்க்க

### மண்டைதீவில் வெடிபொருட்கள்

## சர்வதேச மைதான அகழ்வில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இருந்து வெடிபொருட்கள் மீட்கப் 23ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.கொழும்புத்துறையில்

## போதை மாத்திரைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறைப் பகுதியில் 180 போதை மாத்திரைகளுடன் 18, 22 மற்றும் 24 வயதுடைய மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் 23ஆம் பக்கம் பார்க்க

## வல்லிபுர ஆழ்வாருக்கு

### இன்று கொடியேற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று 21ஆம் திகதி 23ஆம் பக்கம் பார்க்க

## திலீபனின் ஆவணக் காட்சியகம் நல்லூரில் நேற்றுத் திறப்பு





23ஆம் பக்கம் பார்க்க


தாமதிக்காமல் நிறைவுக்கு முந்தய விலையில் பெற இப்போதே முந்துங்கள்



PAY ONLY 40%
MARINA SQUARE UPTOWN COLOMBO
MARINASQUARE.LK
+94 77 2272 727
*T&C apply
(C-287)


நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் ரெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 14 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

தொடர்புகளுக்கு : விமல்

**076 755 8606, 077 638 5683**

(5454)

## உடன் விற்பனைக்கு

1) யாழ். A9 வீதியில் கச்சேரிக்கு அண்மையில் A9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும்,
2) யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் 10 பரப்புக் காணியில் அமைந்துள்ள 15 rooms உடன் கூடியவீடும்
3) யாழ். பிறவுண் வீதியில் Ladies Colleage சந்திக்கு அண்மையில் 6 பரப்புடன் கூடிய 2 பரப்புக் காணியும்
4) யாழ். தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் K.K.S. வீதி முகப்புடன் 10 பரப்புடன் கூடிய அதிநவீன கட்டடமும் காணியும்
5) யாழ். K.K.S. வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.Sவீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
6) யாழ். மின்சார நிலைய வீதியில் CTP தரிப்பிடத்திற்குப் பின்புறம் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட2 மாடிக்கடைகளும்
7)யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாக் கடைக்கும் சாரங்கா நகை மாளிகைக்கும் இடையில் 4 கடைகளும் உடன் விற்பனைக்குண்டு.

(C-3928)

**077 723 2535**

## ஆரம்பகால திருமண சேவை

கனடா, அவுஸ்திரேலியா, லண்டன் மற்றும் உள்ளூர் வெளியூர் மணமகள், மணமகன் ஆகியோர் உள்ளனர்.

1988.12.29, பூரம், லண்டன், விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்கவில்லை)

இஞ்சினியர், வைத்தியர், பல்கலைக்கழக பட்டதாரி மணமக்கள் உள்ளனர்.

**077 528 9851**

(5478)

## வாடகைக்குத் தேவை

யாழ்பாணம் மத்திய நகரம், திருநெல்வேலி, ஆனைப்பந்தி பகுதியில் பிரபல தனியார் நிறுவனம் யாழ். கிளைக்கான கட்டிடம் வாடகைக்கு தேவை. 800 முதல் 1000 சதுரஅடி அளவு எதிர்பார்க்கபடுகிறது.

**076 094 5306**

(1571)

## சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் வேலைக்கு ஆட்கள் தேவை

பண்ணையில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கவர்ச்சிகரமான சம்பளம்.

தொடர்பு : **077 851 7227**

(1572)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

உரும்பிராயில் (யாழ்ப்பாணம்) அமைந்துள்ள வீடொன்றிற்கு தங்கிநின்று வீட்டுவேலை செய்ய பணிப்பெண் தேவை.

வயதெல்லை : 40 – 50

தொடர்புகளுக்கு :

**077 773 0900**

(1574)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பிறந்த BSc, MSc தகைமையுடைய குறுகிய கால விவாகரத்தான மணமகளிற்கு உயர் கல்வி கற்ற தகுதியான மணமகனை உள்நாடு/ வெளிநாடு எதிர்பார்க்கிறோம்.

**T.P : 077 413 7211**

(1522)

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு Graphic designer, Type setting செய்வதற்கு வேலையாள் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Rs 30,000 – 50,000 வரை சம்பளம் வழங்கப்படும்.

தொழில் தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.


தொடர்புகளுக்கு :

**076 192 3444, 077 482 1912**

(1565)


## மரண அறிவித்தல்

பிறப்பு
14 - 12 - 1954



இறப்பு
19 - 09 - 2025

### திருமதி லோகேஸ்வரன் மணிமலர்

செட்டிகுறிச்சி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரன் மணிமலர் அவர்கள் கடந்த (19.09.2025) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - புஸ்பரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் லோகேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் பவபிரியாவின் அன்புத் தாயாரும் கிருபானந்தன், சிவானந்தன், காலஞ்சென்ற இன்பமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெயமணி - கனகேந்திரனின் பாசமிகு மைத்துனியும் சாய்ராமின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2025) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 637 0067

(5466)


## வேலைவாய்ப்பு அறிவிப்பு

### கல்வி ஆலோசகர்
### ISC Education யாழ்ப்பாணம்.
### முழு நேர வேலை

**சிறந்த ஆலோசகராக விரும்புகின்றீர்களா?**
உலகளாவிய கல்வி வாய்ப்புகளுக்குத் தகுதியான மாணவர்களை வழிநடத்த உங்களுக்கு ஓர் அரியவாய்ப்பு!

**பொறுப்புகள் :**

- கல்வித் தேர்வுகள் மற்றும் விசா செயல்முறைகள் குறித்து தனி வழிகாட்டல் வழங்குதல்.
- பல்கலைக்கழக விண்ணப்ப செயல்களில் உதவுதல்.
- புலமைப்பரிசில், சேர்க்கை விதிகள் மற்றும் கல்வித் துறையின் சமீபத்திய மாற்றங்களைப் பற்றி புதுப்பித்து வைத்திருத்தல்.
- விளம்பர பிரச்சாரங்கள்,மற்றும் மாணவர் ஈடுபாட்டு நிகழ்ச்சிகளில் ஆதரவு வழங்குதல்.

**வேலைக்கான தகுதிகள்:**

- உயர்தர (A/L) சித்தி அல்லது ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்றிருத்தல் சிறந்தது.
- சிறந்த தொடர்பாடல் மற்றும் தனிப்பட்ட திறன்கள் இருத்தல் அவசியம்.
- கல்வி அல்லது ஆலோசனை துறையில் அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்!

(C-286)

**விண்ணப்பிக்கும் முறை:**

தகுதியுடையவர்கள் தங்களது CV யினை admissions@iscedu.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சருமத்தை வெண்மையாக்கும் கிரீம்களால் கருப்பையில் உள்ள குழந்தைகளுக்கு பாதிப்பு

## சமூக மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

சருமத்தை வெண்மையாக்கப் பயன்படுத்தப்படும் கிரீம்களை கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்படுத்துவதால், அது கருப்பையில் உள்ள குழந்தையை நேரடியாக பாதிப்பதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளது. சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் அஜித் அழகிய வண்ண இதனைத் தெரிவித்துள்ளார்.


பெண்கள் கர்ப்ப காலத்தில் இந்த கிரீம்களைப் பயன்படுத்துவதன் மூலம் குழந்தையின் மூளை வளர்ச்சி, நினைவாற்றல் இழப்பு மற்றும் குழந்தையின் நடைப்பயிற்சியில் சிரமங்கள் ஏற்படுதல் போன்ற பல செயற்பாடுகளை பாதிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கிரீம்களில் அதிக அளவு பாதரசம் இருப்பதால் தோல் வெண்மையாக மாறுகின்றது. இந்த பாதரசம் உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருள்.

பெண்களின் கர்ப்ப காலத்தில் இரத்த ஓட்டம் மிக வேகமாக இருப்பதால், கிரீம்களில் உள்ள பாதரசம் உள்ளிட்ட கன உலோகங்கள் தோலில் உறிஞ்சப்படுவது விரைவாக நிகழ்கிறது.

இதனால், சருமத்தை வெண்மையாக்கப் பயன்படுத்தப்படும் கிரீம்களில் அதிக அளவு பாதரசம் இருப்பதால், அந்த கிரீம்கள் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்படுவதில்லை என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் அஜித் அழகியவண்ண தெரிவித்துள்ளார். (நி)

# மகிந்த-கோட்டா திடீர் சந்திப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்தவை சந்தித்துள்ளார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்திற்கு நேற்று முன்தினம் சென்ற கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவரது மனைவி, மகிந்தவுடன் நீண்ட நேரம் உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டரை மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த உரையாடலின் போது, அதிகமாக குடும்ப விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

அத்துடன் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் சற்று கவனம் செலுத்தப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி. அமரர்.

**சாந்தாதேவி தங்கத்துரை**

*அன்பதனை சொரிந்து அருகிருந்து ஆதரித்த*
*எங்கள் அன்புத்தெய்வமே அம்மா*
*பாரினிலே எம்மை தவிக்க விட்டு*
*நினைவுகள் நிறையவே தந்து சென்றதேனோ*
*என்றும் எம் நெஞ்சை விட்டு*
*அகலாது உங்கள் நினைவுகள்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*வெல்வில் முருகனை பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!*

தோற்றம் 21.07.1952

மறைவு 22.08.2025

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

(C-3926)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## அமரர். காசிப்பிள்ளை இராசரத்தினம்



*நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் குளம் கல்மடுநகரை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் 19.09.2025 அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, நடராசா, புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரரும், சயந்தன் (கரும்புள்ளியான்), ஜெயதர்சினி (சுவிஸ்), யுகநாத் (ஆசிரியர் கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி), சனோசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி, காலஞ்சென்ற ராஜ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிசன், விதுசன், சர்மிகா, சர்மிகன், அக்ஷஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் வரதலட்சுமி, புஸ்பமலர், தனுஸ்கோடி, வசந்தி காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.09.2025 நாளை திங்கட்கிழமை மு.ப 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**பிள்ளையார்குளம் கல்மடுநகர்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.**

*தகவல்:*
**குடும்பத்தினர்**

(1569)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 511

21.09.2025





# நீதி வேண்டும் தமிழினத்தின் ஆத்மார்த்த குரல்

அபிமன்யு

**"பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தராமல் தவறிழைத்தவர்களைப் பாதுகாக்கும் செயலில் எவர் ஈடுபட்டாலும் அது மிகப்பெரிய தவறு."**

அந்தத் தவறை உலக நாடுகளின் தலைவர்கள் மேற்கொள்வார்களாயின் அவர்களிடம் இம்மியும் மனச்சாட்சி இல்லை என்பதே முடிவாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் கடந்த 8ஆம்திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வேலையை சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மேற்கொண்டிருந்தமையினை அவதானிக்க முடிந்துள்ளது.

ஐநா கூட்டத்தொடரில் பிரிட்டன், வடஅயர்லாந்து, கனடா, மாலாவி, மொன்டேனீக்ரோ மற்றும் மெசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து இலங்கையில் இறுதி யுத்தத்தில் நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களுக்கு பொறுப்புக்கூறும் புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற உள்ள நிலையில் மேற்குறித்த நாடுகள் இலங்கையில் இறுதிப் போரில் நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களுக்கான ஆதாரங்களைத் திரட்டுவதை நிறுத்துமாறு சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருந்தன.

மேற்குறித்த கோரிக்கையினை பிரிட்டன் நிராகரித்திருந்தமை தமிழ் மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்துவதாய் அமைந்துள்ளது.

ஏலவே அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் எதிர்த்திருந்தமை அமெரிக்கா எதிர்ப்பு வாதமாகப் பார்க்கப்பட்ட நிலையில், இப்போது பிரிட்டன், கனடா உள்ளிட்ட ஆறு நாடுகள் கொண்டுவரும் பிரேரணையை எதிர்ப்பதனூடாக இலங்கை அரசை பாதுகாக்க முனைகின்றனர் என்பது தெளிவாகப் புரிகிறது.

இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என மூவின மக்கள் வாழ்கின்ற போதிலும் சிங்கள மக்களே பெரும்பான்மையானவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களே ஆட்சியுரிமைக்குரியவர்களாக இன்றுவரை இருந்து வருவதுடன் சிங்கள மொழியே ஆட்சிமொழியாகத் திகழ்ந்து வருகிறது.

இதுவே இந்த நாட்டின் இனமோதலுக்கு மூல காரணமாக அமைந்திருந்தது.

சிங்கள மொழி ஆட்சி மொழி என்பதுடன் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் மீது வன்மத்தைக் கட்டவிழ்த்து விட்டனர்.

அவர்கள் வளங்களைச் சூறையாடினர். அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்தார்கள். அதை எதிர்த்து நின்ற சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்க முற்பட்டனர்.

இதன் விளைவு போர் வெடித்தது. உரிமைக்கான போரில் சிங்கள ஆட்சியாளர்களை தமிழ் இளைஞர்கள் எதிர்த்தனர்.

எமக்கான உரிமைகளைத் தாருங்கள் எனப் பல வழிகளில் கேட்டனர். அதற்கு பேரினவாத அரசுகள் இசையாததன் விளைவு ஆயுதப் போர் உச்சம் பெற்றது.

நான்கு தசாப்தம் கடந்த போரை ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சி முற்றுப்பெற வைத்தது.

ஆயினும் விடுதலைப் புலிகளுடனான போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர்.

அதற்கான போதுமான ஆதாரங்கள் பல சர்வதேசத்தின் கைகளில் இருந்த போதிலும், போர் நிறைவுற்று 16 ஆண்டுகள் கடந்து விட்டன. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் தொடங்கும் சந்தர்ப்பங்களில் ஈழத்தமிழினத்துக்கு மேற்கொள்ளப்பட்ட இன்னல்களுக்கு நீதி கிடைக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் என ஐநா மனித உரிமை ஆணையாளர்கள் கூறினாலும் அது வெறும் கண் துடைப்பாகவே கடந்து விடுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை நாடுகள் பல இலங்கை அரசை பாதுகாப்பதே இதற்குக் காரணம் எனலாம்.

இலங்கையில் நடந்த போர்க்குற்ற மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் பேசப்பட்ட காலத்திலிருந்து சர்வதேச விசாரணைகளை ஏற்கமாட்டோம். உள்ளக விசாரணையினூடாக தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என ஆட்சிபீடமேறிய அரசுகள் கூறிவந்தாலும் உள்ளக விசாரணைகள் நடைபெற்றனவா என்றால் அது வெறும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டியது அந்த நாட்டின் அரசாங்கத்தின் தார்மீகக் கடமை.

இதை அரசாங்கம் செய்யாமல் தவறிழைத்தவர்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டால், பாதிக்கப்பட்ட தமிழினம் சர்வதேசத்திடம் முறையிடுவதை விட வேறு எதைச் செய்துவிட முடியும்?

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசை வேறு எந்த அரசாங்கத்தையும் நம்பாத அளவிற்கு தமிழினம் நம்பியிருந்தது.

இந்த அரசும், ஐ.நாவில் நின்று சர்வதேச தலையீட்டிற்கு இடமில்லை என்றே கூறி இருக்கிறது.

இதைவிட இலங்கைக்கு எதிராக பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் கொண்டுவரும் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கையில் அதீதீவிரமாகச் செயற்படுகிறது.

சீனா – பாகிஸ்தான் போன்ற நாடுகளின் எதிர்ப்பும் இலங்கை அரசின் ஆதரவு கோரலின் வெளிப்பாடே.

இங்குதான் இந்த அரசு ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் குடிமக்களைப் பாதுகாக்க வேண்டியவர்களே அழித்தொழித்தனர்.

இந்த விடயம் சர்வதேச மட்டத்திற்குச் சென்று விட்டது.

இனியும் இதை விசாரிக்காமல் மீண்டும் மீண்டும் தவறிழைத்தவர்களைப் பாதுகாக்க முற்பட்டால் அது ஏனைய அரசுகளின் வழியிலேயே தற்போதைய அரசும் பயணிக்கின்றது என்ற முடிவுக்கு தமிழினம் வந்துவிடும்.

தவிர நினைவேந்தும் உரிமைக்கு தடை ஏதும் இல்லை என அரசு கூறிய நிலையில் திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்காக வைக்கப்பட்டிருந்த அவரின் உருவப்படத்தை பொலிஸார் அப்புறப்படுத்தியிருக்கும் செயல் கண்டிக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் நினைவேந்தும் உரிமையை தட்டிப் பறிக்கும் செயல் நடந்திருக்கிறது எனின், நிச்சயம் எங்கோ ஒரு பொறி உண்டென்பதே பொருள்.

தமிழ் மக்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவர் என்ற பயம் பெரும்பான்மையினரிடம் இருக்கவே செய்கிறது.

ஆனால் தமிழினம் கேட்பதெல்லாம் ஒன்றேயொன்றுதான்.

அதாவது இறுதி யுத்தத்தில் நடந்த போர்க்குற்ற மீறல்கள் விசாரிக்கப்பட வேண்டும். தவறிழைத்தவர்களுக்கு தாராதரமின்றி தண்டனை வழங்கப்பட வேண்டும். தமிழினத்தை தனது பூர்வீக நிலத்தில் எதுவித அச்சுறுத்தலுமின்றி நிம்மதியாக வாழவிட வேண்டும்.

இதை இந்த அரசு செய்யும் என தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

அந்த நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்டுவிடாமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். இதுவே தமிழினத்தின் ஆத்மார்த்தமான வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

சிவபூமி அறக்கட்டளையில் இணைந்து கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் சிவப்பணிக்குப் பேருதவி புரிந்த அவரின் மறைவு பேரிழப்பாகும்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

**விதானையார்:-** நெல் விதைப்புக் காலம் ஆரம்பமாகி விட்டது. நெற் செய்கையாளர்களுக்குத் தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த முறை மழை முன்கூட்டியே பெய்துள்ளதால, நெல்விதைப்பும் முந்தக் கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே விதை நெல்லு இல்லை என்றில்லாமல், தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கமத்தொழில் திணைக்களங்கள் மேற்கொள்ள வேணும்.



புண்ணியமூர்த்தி
ஸ்ரீ விக்னேஸ்வரன்

**கங்காணி:-** விதானையார் சொல்லத்தான் நினைவுக்கு வருகுது.


மழை அதிகமாகப் பெய்கின்ற சந்தர்ப்பங்களில மழை வெள்ளம் ஓடுவதற்கு வசதியாக வெள்ள வாய்க்கால்களைச் செப்பனிடுவதும் அவசியமானது.

பொதுவில வயலில தேங்குகின்ற மழை வெள்ளம் வழிந்தோடுவதற்கான கட்டமைப்புகள் எங்களிட்ட இருக்குது.

எனினும் உரிய நேரத்தில் வெள்ள அணைகளைத் திறந்து விடாத காரணத்தாலும் வெள்ளம் ஓடுகின்ற வாய்க்கால்கள் குப்பை கூழங்களால் அடைபட்டுக் கிடப்பதாலும் வயல்களில மழை வெள்ளம் பெருகிப் பயிர்களை அழிக்குது.

ஆகையால இந்த முறை வெள்ளம் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோட, நெல் அழிவுகளைத் தடுத்து விவசாயிகளைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுக்க வேணும்.

இதில ஊர்தோறும் உள்ள கமத்தொழில் அமைப்புகள் உசாராகச் செயற்படுவதில தான் விவசாயிகளின்ர எதிர்காலம் தங்கியுள்ளன.



## பஸ்களில ஏறி உதவி கேட்கினம் இது கவனிக்கப்பட வேண்டும்

இவ்வாறு கங்காணி கூற, இடையில் குறுக்கிட்ட சாத்திரியார்; கங்காணியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

அதோட வரம்புகட்டுகின்ற கூலி, விதைப்புக் கூலி, மருந்தடிக்கின்ற கூலி, வெட்டு மிசின் அறவிடுகின்ற கட்டணங்கள் என்பன ஊருக்கு ஊர் வித்தியாசப்படுவதைக் காண முடிகிறது.

சில இடங்களில நெல் வெட்டு மிசினுக்குக் கண்டபாட்டில கட்டணங்களை அறவிடுகினம். எனவே கூலி நிர்ணயம் மற்றும் கட்டண விதிப்பு என்பன தொடர்பிலும் கமத்தொழில் திணைக்களங்கள் தலையிட்டு அதை நிர்ணயம் செய்ய வேணும்.

இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** அது சரி போக்குவரத்துச் சேவையில ஈடுபடுகின்ற பஸ்ஸில சில பேர் ஏறி மருத்துவ சிகிச்சைக்குக் காசு சேர்க்கினம்.

சிறுநீரகம் செயலிழப்பு, இதய சத்திர சிகிச்சை எனக் கூறி நிதி சேகரிக்கப்படுகிறது மட்டுமல்ல, அந்த வேலை தொடர்ச்சியாகச் செய்யப்படுவது தான் சந்தேகத்தைத் தருகுது.

ஒரே ஆள் ஒரே பெயரைக் கூறிக் கொண்டு வருடக் கணக்கில காசு சேர்க்கப்படுகிறது.

இன்னும் சிலர் துண்டுப் பிரசுரங்களைப் பயணிகளிட்ட வலுக்கட்டாயமாகக் கொடுத்து, அதைத் தொடர்ந்து பணம் வசூலிப்பது எனப் பல்வேறு குழறுபடிகள் பஸ் பயணத்தில நடக்குது.

உண்மையாக உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவுவது தருமம். ஆனால் அதை வைத்துக் கொண்டு ஏமாற்ற நினைப்பதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

**மூப்பர்:-** சிறாப்பர் சொன்ன விடயத்தை நானும் அவதானித்திருக்கிறன். இது விடயத்தில பஸ் நடத்துநர்கள் சற்று விழிப்பாக இருக்க வேணும்.

இவ்வாறு மூப்பர் கூற, ஆலடி அமைதியாகியது.

அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** எங்களிட்டயும் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்குது.

வட பிராந்திய போக்குவரத்துச் சேவையும் தனியார் போக்குவரத்துச் சேவையும் சேர்ந்து நீண்ட தூரத்திற்கு இணைந்த சேவையை வழங்குவதற்கான ஆலோசனைகள் முன்மொழியப்பட்ட போதிலும் அதனை அமுல்படுத்த முடியாமல் இருக்குது.

**வாத்தியார்:-** ஓ! ஏலவே நடந்த சண்டைகள், அடிபாடுகளை முன்வைத்து சி.ரி.பி காரர்கள் தனியாரோட இணைந்து செயற்பட முடியாது எனச் சொல்லுகினம் போல.

**மூப்பர்:-** கட்டாயப்படுத்தினால் உடன வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கிவிடும்.

அண்மையில சில நாட்கள் வட மாகாண சி.ரி.பியினர் பணிப்புறக் கணிப்பில ஈடுபட்டிருந்தவியள்.

என்னைப் பொறுத்த வரை பணிப்புறக்கணிப்பு இனி எடுபட மாட்டாது.

**சாத்திரியார்:-** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:-** அண்மையில தபால் திணைக்கள ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில ஈடுபட்டவியள். பின்னர் ஒரு மாதிரியாக அது முடிவுக்கு வந்தது.

ஆனால் இனி எந்தத் தொழிற்சங்கங்கள் பணிப்புறக் கணிப்பில ஈடுபட்டாலும் அவர்களுக்கு எதிராகப் பொது மக்கள் கிளர்ந்தெழுவினம்.

இதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கிற்றுது.

தாராளமான சம்பளத்தையும் எடுத்துக் கொண்டு, பணிப்புறக்கணிப்புச் செய்யவோ எண்டு பொது மக்கள் கிளர்தெழுந்தால், எல்லாம் அம்போ எண்டாகிவிடும்.

இவ்வாறு மூப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**உள்ளக விசாரணை என அதே பழைய புராணத்தைப் பாடுவது சரியானதா வியாசரே?**

சுதன்- குப்பிளான்

கருங்கல்லிலும் ஈரம் இருக்கும், எம்மை ஆழ்பவர்களிடம் ஈரம் இருப்பதாகத் தெரியவில்லை.

காலம் காலமாக வந்தவர்கள் எம் மீது கருணை காட்டாமல் எம் தலைகளில் குண்டு போட்டனர். சுற்றி வளைப்பு என்றும் தலையாட்டி என்றும், காவலரன் என்றும் கண்ணில் பட்டவர்களைக் கைது செய்தனர்.

எதைக் கண்டனர்? எம் இனத்தை அழித்து முடித்தனர்.

இன்னும் இருக்கும் மிச்சம் மீதியையும் இல்லாதொழிக்க உள்ளகம், வெளியகம் என்று உவமை பேசி உருக்குலைக்கின்றனர்.

உருள்வது தமிழர் தலைதானே, அவர்க்கென்ன?

**எம் மூதாதையரின் இயல்பு வாழ்வைப் புரிந்து கொள்ளாமல், தான் தோன்றித்தனமாக நடக்கலாமா வியாசரே?**

மகாலட்சுமி- கொக்குவில்

குரக்கனும் சாமையும் தினையும் உண்டனர் திடகாத்திரமாய் வாழ்ந்தனர் எம் முன்னோர்.

வியர்வை சிந்தி வேளாண்மை செய்து நோய் நொடியின்றி வாழ்ந்தனர் எம் முன்னோர்.

பத்துப்பிள்ளை பெத்தும் பத்தியம் சரியாய்ப்பாத்ததால் பலமாய் இருந்தனர் எம் முன்னோர்.

மாட்டு வண்டியும் நடையும் மிதி வண்டியும் பாவனையானதால் உரமாய் இருந்தனர் எம் முன்னோர். என்றைக்கு உண்டதை செரிக்க உடற்பயிற்சி செய்யத் தொடங்கினோமோ அன்று தொட்ட நாசம்.

உழைப்பும் இல்லை.களைப்பும் இல்லை. நோய் நொடிக்கு நூறு கொப்பி கொண்டு நீண்டு நிக்கிறோம் வரிசையில் இன்று.



முத்தயன்கட்டு ,செம்மணிப் பிரச்சினைகள் மறைக்கப்படுகிறதா? மறக்கப்படுகிறதா?

**எமது கல்வியியலாளர்கள் எமது பொருளாதாரத்தை மீட்க ஆலோசனை வழங்கமாட்டார்களா வியாசரே?**

பார்த்தீபன்- யாழ்ப்பாணம்

யார்? எமது கல்வியியலாளர்களா? 1980 களின் சிலபசை இன்னும் கட்டித் தழுவிக் கற்பிக்கும் அவர்களிடம்பொருளாதாரமீட்சிக்குப்பொருத்தமானபதில்வருமா?

பட்டத்துக்கு மேல் பட்டம் பெற்று ஊதியத்தை உயர்த்தும் வளி தேடுபவர்களிடம் எங்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கு பொருத்தமான பதில் வருமா?

கடவைக்குவரும் மீன்காரனிடமும் வீதியில் நிற்கும் பழக்காரனிடமும் சந்தைகளில் கூவும் மரக்கறிக் காரனிடமும் பேரம் பேசி பத்தைக் குறைக்க பார்ப்பவர்களிடம் எம்பொருளாதார முன்னேற்றத்துக்கானபதில்கிடைக்குமா?

பகல் கனவு காணாமல் பார்க்கும் வேலையைச் சரியாய் பாருங்கள். இவர்கள் இருப்பிடத்திற்கு வெற்றிடம் வரும்வரைக்கும்.

**வியாசர் அவர்களே! நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்பதன் விளக்கம் என்ன?**

சாயிசெல்வம்- பருத்தித்துறை

அவர் ஒரு நேர்மையான பொலிஸ் அதிகாரி. சிறுவயதில்தொலைந்துபோன தனது மகனை நினைத்து நித்தம் நித்தம் வேதனைப்பட்டுக் கொண்டாராயினும் ஒரு நாளும் அவர் கடமை தவறியதில்லை.

மிகப் பெரும் போதைக் கடத்தல் கும்பல் தலைவனைத் துரத்திச் செல்கிறார். அவன் அவரைத் தாக்கி விட்டு ஓடுகிறான்.

அவர் தனது துப்பாக்கியை எடுத்து ஓடாதே. ஓடினால் சுட்டுவிடுவேன் என எச்சரிக்கிறார்.

அதற்கு அவன் உங்களால் என்னைச் சுட முடியாது. நான்தான் சிறுவயதில் காணாமல் போன உங்கள் மகன் என்கிறான்.

பாசமா? கடமையா? என்ற இருவழியின் நடுவே திகைத்து நின்ற அவர் கடமை என்ற பக்கம் நின்று அவனைச் சுடுகிறார் அதிகாரியாக.

அவன் இறந்து போகிறான். அதன்பின் அவனை மடிமீது வைத்து அழுது புலம்புகிறார் தந்தையாக.

**வியாசரே,இம்முறை மாகாண சபைத் தேர்தலில் டிக்டொக் பிரபல்யம் யாராவது வெற்றி பெற வாய்ப்புண்டா?**

க.மகேந்திரன் - இணுவில்

பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடினாராம் என்றொரு சொல்லாடல் உண்டல்லவா?

வாசிப்பின் மகிமை அற்றுப் போகிறது. தொட்டதற்கும் கூகிளிடம் பதில் கேட்கும் மூளை இல்லாத மனிதர்களாகி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

போதாததற்கு, முகப்புத்தகம், டிக்டொக் என சமூக வலைத்தளங்கள் எம் இனத்தின் பண்பாடு கலாசாரத்தை வெட்டிவீழ்த்தி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

Filter எனும் கறுமம் கிழவியைக் குமரியாயும் குமரியைக் கிழவியாயும் கோடு காட்டி நிற்கிறது.

இந்த நிலையில் எமக்கு இருக்கும் அரசியல் வெற்றிடத்தை டிக்டொக்காரர் நிரப்ப நினைப்பது எவ்வளவு அபத்தமானது.

**முத்தயன்கட்டு ,செம்மணிப் பிரச்சினைகள் மறைக்கப்படுகிறதா? மறக்கப்படுகிறதா?**

ஹெமோஸ்- யாழ்.குருநகர்

எதிரணியினர் மறைக்க நினைக்கின்றனர். ஆனால் நாமோ மறக்க முயல்கிறோம்.

மறப்பது எமக்கொன்றும் புதிதில்லையே. அரை இறாத்தல் பாணுக்காக ஐந்து மணித்தியாலங்கள் வரிசையில் நின்றதை, தேனீருக்கு சீனிக்குப்பதில் ரொபியைக் கடித்துக் குடித்ததை.

வீதியில் எம் சொந்தங்கள் நாய்களைப் போல் சுடப்பட்டு வீசிக்கிடந்ததை, வன்னிப் பெரு நிலப் பரப்பில் கொத்துக் கொத்தாய் எம் உறவுகள் இறந்து போனதை.

எமக்கே உரித்தான நிலங்களை, வளங்களை பேரினவாதிகள் அபகரித்ததை மறந்துபோன எமக்கு மறப்ப தொன்றும் புதிதில்லையே.செம்மணியில் சில நூறு எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன பலநூறு அகழ்ந்தெடுக்காமல் புதைந்து கிடக்கின்றன.மறப்போம் மறப்போம் மறந்து கொண்டே இருப்போம்.



அண்மையில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட சிவலிங்கம் அகற்றப்பட்டமை தொடர்பாக தங்களின் கருத்து என்ன வியாசரே?

**ஒரு மனிதனுக்கு மூன்று கைகள் உண்டு. அது எவ்வாறு சாத்தியப்படும் வியாசரே?**

தவராஜன்- கொற்றாவத்தை

நீசோர்ந்த போதெல்லாம் துளிர்விடும் கை. எடுத்து வைக்கும் காலடிகளை திடமாய் வைக்கச் செய்யும் கை. எந்த விடயத்தையும் பகுத்தறிந்து பார்க்கும் கை.

பணமும் குணமும் வேறு வேறென்று பண்புடை சொல்லும் கை.சொந்தங்கள் வீழ்ந்து கிடக்கும் போது தூக்கிவிடும் கை.உன் மரண பயத்தை மாற்றும் கை.

நீ மரணித்த போதும் மரணமின்றி வாழும் கை.

அந்தக் கை; உன் உடலிலிருக்கும் இரு கைகளிலும் மேலான கை. அது நம்பிக்கை எனும் உன்னத கை.

**அண்மையில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட சிவலிங்கம் அகற்றப்பட்டமை தொடர்பாக தங்களின் கருத்து என்ன வியாசரே?**

சாயிசன்- கோண்டாவில்

எவனுடனும் விளையாடலாம் சிவனுடன் விளையாடக் கூடாது என்பது தெரியாமல் அவனுடன் விளையாடினால் அதன் தாக்கம் தாறுமாறாக இருக்கும் என்பதே மெய்.


தன்னை மதியாமல் யாகம் செய்த தக்கனின் யாக சாலையை துவம்சம் செய்து சிவனே உலகின் மூலம் என்பதை புரிய வைத்தவன் அப்பன் சிவன்.

இதை அந்த அர்ப்பர்களுக்கும் அடுத்த நாட்களில் பாடம் புகட்டுவான் சிவன் என்பதை நம்புவோம்.

நடப்பவை எல்லாம் நன்மைக்கே. அன்பே சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



**1.**பாமர மனிதனைவிட படிப்பறிவுள்ளவன் விரைவில் இறப்பது ஏன்?

**2.**அடுப்பு புகையை பல மடங்கு சுவாசித்த கிழவிகளைவிட சிகரெட் புகைத்தவன் பலருக்கு புற்றுநோய் வருவது ஏன்?

**3.**கள்ளுக் குடித்த கிழவனைவிட கலர் சாராயம் குடிக்கும் குமாரர்கள் பலருக்கு கல்லீரல் பாதிப்பு ஏன்?

**4.**தேள் கொட்டினால் வெறும் வெங்காயத்தை தேய்த்துவிட்டு வேலையை தொடர்பவன் எங்கே? எறும்பு கடிக்கு மருத்துவமனைக்கு விரைபவன் எங்கே?

**5.**நெல் அறுவடை செய்யும்போது விரலை அரிவாள் வெட்டி விட்டால் கையில் களிமண்ணை அப்பிக் கொண்டு வேலை பார்ப்பவன் எங்கே? பிளேடு கிழிக்கு ஆன்டிபயோடிக் இட்டுக் கட்டுப் போடுபவன் எங்கே?

**6.**அழுக்கு மணலில் விழுந்து புரண்டு விளையாடிய குழந்தையைவிட மணலையே தொட்டிராத குழந்தைக்கு நோய் எதிர்ப்புசக்தி குறைபாடு ஏன்?

**7.**உண்ட கையோடு ஓடிவந்து பிரசவம் பார்த்து ஆரோக்கிய குழந்தையை அள்ளி கொடுத்த கிழவிகளின் கையைவிட ஆயிரம் முன்னெச்சரிக்கையோடு கையுறை போட்டுக் கொண்டு அறுவை சிகிச்சை செய்த குழந்தை ஐ.சி.யூவில் இருப்பது ஏன்?

**ஏன்...? ஏன்...? ஏன்...?**

காரணம் மிக சிறிது. இயற்கைக்கும் நமக்குமான தொடர்பு இல்லாமல் போனது ஒன்று.

நோயைப் பற்றிய அதிக அறிவோடு இருப்பது மற்றொன்று.

எங்கள் கிழவிகளுக்கு தெரிந்தது எல்லாம் தலைவலி, நெஞ்சுவலி, வயிறுவலி கை, கால் வலி அவ்வளவு தான்.

ஆனால் இன்னும் சில வருடங்களில் உடம்பில் உள்ள 6000 கோடி செல்களுக்கும் தனித்தனியே மருத்துவம் பார்க்கப்படும். அதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப் படும். மனிதனின் ஆயுள் அதிக பட்சம் முப்பதாகக் குறைக்கப்படும்.

எந்த நோயும் மனிதனை கொல்வதில்லை. அதைப்பற்றிய பயம்தான் அவனை கொல்கிறது. இயற்கை தனது கோட்பாடுகளில் இருந்து ஒருபோதும் மீறுவதில்லை.

உடலை அதன் போக்கில் விட்டுவிட்டு உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். அது எதற்காக வடிவமைப்பட்டதோ அதை மிகச் சிறப்பாக செய்யும்.

என்னை பொறுத்தவரை எவர் ஒருவர் இயற்கையோடு சேர்ந்து அதாவது மனமும், உடலும் இணைந்து செயற்படுகிறதோ அவர்களுக்கு நோய்களும் வருவதில்லை, அப்படியே வந்தாலும் ஓரிரு நாட்களில் குணமுமாகி விடுகிறது.

நல்ல மழையில் நனையுங்கள்.

# மனிதனைக் கொல்வது நோயா பயமா?



பயந்து ஓடி ஒளியாதீர்கள். வெயிலைக் கண்டு அச்சப்படாதீர்கள். காற்றைக் கண்டு பயப்படாதீர்கள்.

குளிரில் ஸ்வெட்டர் போட்டு பதுங்காதீர்கள்.

சுடுதண்ணீரில் ஒருபோதும் குளியாதீர்கள். சின்னச் சின்ன பிரச்சினைகளுக்கெல்லாம் மருத்துவரிடம் செல்லாதீர்கள். இப்படி வாழ்ந்து பாருங்கள் வாழ்வே இனிமையாகும்.

இயன்றவரை இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால் நோயின்றி வாழலாம். வாழ்க வளத்துடன்...

**கண்ணில் பட்ட அழகான பதிவு.**

# கவிதைக் கலசம்


## தோண்ட மீண்டெழுகின்றேன்


**செ**ம்மணியாம் செம்மணி
நிம்மதியற்ற உறக்கமடைந்தேனே அன்று
வெம்பி வெம்பி அழுதேன்
இரக்கமுடையார் யாருமில்லை
தம்நிலை அறியாது பலர்
புதைந்தனரே மண்ணுக்குள்ளே

குருதி சிந்தினும்
கண்களின் எதிரே ஒளியொன்று
இறுதி வெளிச்சம் மறைந்ததே
கண்களில் மண் வீசப்படவே
தகுதி இல்லாதவன் ஆகிவிட்டேனோ
வையகத்தில் வாழ
பகுதி உயிர் மறைந்ததே
பூமித் தாயின் காலடியில்

இன்று தோண்டுகிறார்கள்
நன்று நன்று நன்று
குன்று போல் குவிந்து கிடந்தோமே
அன்று உதவிட யாருமில்லையே
மீண்டும் மீண்டெழுகின்றேன்
ஆனால் வெறும் எலும்புகளாக...


R.அபிஷாயினி - கொக்குவில்





அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
அரசியல் இலக்கியம் கவிதை கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## போதையால் பாழாதே மாறாதே மனிதா...



**ந**வீன யுகத்தில் இயந்திரத்தின்
சத்தங்களோடு, யுத்தங்கள் புரியும்
மனிதா மாண்டுவிடாதே!
மானிடப் பிறவிதனை அர்த்தமாக்கி
அழியாமல் காத்துக்கொள் - உன்
அடையாளங்களை அழித்துவிடாதே!
நாளும் பொழுதும் நம் நாட்டில் நடந்தேறும்
மரணங்களில் ஒன்றாக, போதை
தலைக்கேறியதால் மரணம் என்று
மருத்துவம் செல்கிறது ஓ மனிதா
சிலந்தி வலைக்குள் சிறைப்பட்ட
சிலந்திபோல் போதைக்குள்
சிக்கி விடாதே! ஆழ்ந்து சிந்தித்துப் பார்
எஞ்சியுள்ள வாழ்வின்,
அடையாளங்களை காத்துக்கொள்...

சசி. சுயா
குடத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டது



# கிடைத்ததா!

கடவுளிடம் என்ன கேட்கலாம்? கடவுள் சந்நிதியில் நிற்கும் ஒவ்வொருவருக்கும் எழும் கேள்வி இது. பெரியவர்கள் சிலர், "கடவுளிடம் சென்று, ஐந்து இலட்சம் கொடு... பத்து இலட்சம் கொடு... என்று அற்பத்தனமாக வேண்டிக் கொள்ளாதேடா. அவர் உனக்குக் கோடிக் கணக்கில் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருப்பார்" என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

உண்மைதான். எந்த நேரத்தில், யாருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்று கடவுளுக்குத் தெரியாதா என்ன? சரி, கடவுளிடம் என்ன கேட்கலாம். எதை வேண்டுமானாலும் கேட்கலாம் என்கிறார்கள். இறையருட் செல்வர்களும், ஞானிகளும். சுந்தரர் இறைவனிடம் வேண்டுவதாக ஒரு தேவாரத் திருப்பதிகம் உண்டு.

**நீள நினைந்தடியேன் உனை நித்தலும்**
**கைதொழுவேன்**
**வாளன கண்மடவாள் அவள் வாடி**
**வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்**
**சில நெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை எம்பெருமான் அவை**
**அட்டித் தரப்பணியே...**

"குண்டையூரில் எனக்குக் கொஞ்சம் நெல் கிடைத்தது. அதை என் மனைவியிடம் சேர்ப்பிக்க வேண்டும். அவளோ வெகு தொலைவில் இருக்கிறாள். திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே... நெல்லைக் கொண்டு சென்று என் மனைவியிடம் சேர்ப்பிக்க என்னிடம் ஆள் யாரும் இல்லை. ஓர் ஆளை அனுப்பி உதவ வேண்டும்" என்று கோரிக்கை வைக்கிறார் சுந்தரர்.

இப்படியெல்லாமாக கடவுளிடம் கோரிக்கை வைப்பார்கள் என்று ஆச்சரியம் எழலாம். பக்தியோடு, உரிமையோடு எதையும் இறைவனிடம் கேட்கலாம்; கடவுள் கொடுத்து உதவுவான் என்பதற்கு சுந்தரரின் இந்தத் தேவாரப் பாடல் ஓர் உதாரணம்.

கேட்பது சரி... கடவுளுக்குக் கொடுக்கவும் வேண்டும் அல்லவா...? கடவுளுக்கு எதைக் கொடுப்பது... பொன், பொருள், உண்டியலில் காணிக்கை... இவற்றையா...? இல்லை. இவையெல்லாம் கடவுள் கொடுத்ததுதானே! அவன் கொடுத்ததை அவனுக்கே திருப்பிக் கொடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

கோயிலுக்குள் நுழைகிறோம். கொடிமரத்தை வணங்கி, அதற்கு முன்னாலிருக்கும் பலிபீடத்தில் கண்களை மூடி, நெஞ்சம் உருக... "இறைவா என் ஆணவத்தையும், அகந்தையையும் உன் திருவடிகளில் வைக்கிறேன். ஏற்றுக் கொள்" என வேண்டுவோம். நம் அகங்காரத்தை அந்தக் கருணைக் கடலின் காலடியில் சமர்ப்பிப்போம். சரிதானே?!

# ஆச்சி அறிவுரை



## இடிந்தது மந்திரிமனை மட்டுமல்ல எம் மனங்களும்தான்

### பேராண்டி...

ஈழத்தமிழருக்குப் பெருமை சேர்த்த, அவர்களின்ர வீரத்தை உலகிற்குப் பறை சாற்றிய யாழ். இராசதானி மந்திரிமனையின்ர ஒரு பகுதி இடிஞ்சு விழுந்திட்டுதெண்ட செய்தியைப் படிக்க நெஞ்சே நொருங்கிப் போட்டுது பேராண்டி.

யாழ்ப்பாண இராட்சியத்தின்ர கடைசி மன்னன் 2ஆம் சங்கிலிய மன்னனால கட்டப்பட்ட மந்திரிமனை 400 ஆண்டுகளைக் கடந்தும் எவ்வளவு கம்பீரமா, அழகா உயர்ந்து நிக்குது. எங்கட தமிழ் மக்களின்ர வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருந்த மந்திரிமனையை பாதுகாக்க வேண்டியது எங்கட பொறுப்பெல்லோ? ஆனால் நிலை எப்பிடித் தெரியுமோ பேராண்டி? அதை நாங்கள் இடிய விட்டிட்டு இருக்கிறம் எண்டுறதுதான் வேதனையான விடயம்.

கி.பி 1519 தொடக்கம் 1561 வரைக்கும் யாழ்ப்பாண இராட்சியத்தை பொன் கொழிக்கும் பூமியா, சைவத்தின் சொர்க்கமாக வைச்சிருந்தவன் எங்கட சங்கிலிய மன்னன். தமிழ் மீதும் சைவத்தின் மீதும் மிகுந்த மதிப்பை வைச்சிருந்ததற்கு ஆதாரமா இருக்கிறது மந்திரிமனை மட்டும்தான்.

எனக்கு நினைவிருக்கு: நீ நல்லூர் கோவில் போய்வரேக்க கொப்பனைக் கூட்டிக்கொண்டு மந்திரிமனை பார்க்கப் போனனி, பார்த்திட்டு வந்து அதுக்குள்ள எங்கட பெடி - பெட்டையள் தங்கட பெயர்களை கரியாலையும் இலை - குழையாலையும் எழுதி வைச்சிருக்கினம் எண்டு கோபப்பட்டனி. மந்திரிமனையை மழை, வெயில் படாமல் உயரமான, பெரிய கொட்டகை போட்டால் நல்லமெண்டு சொன்னனி.

பேராண்டி, மந்திரிமனையைப் பாதுகாக்க வேணும் எண்டு ஆரும் நினைக்கேல்ல. அது அழிஞ்சு போகிறது நல்லதெண்டுதான் நினைச்சிருக்கினம்.

ஏனெண்டால் அது தமிழரின்ர வரலாறுதானே. அதைப் பாதுகாத்து வைக்கிற தேவை எங்களுக்கு தேவையில்லாத வேலையெண்டு நினைச்சிட்டினம் சிலர்.

மந்திரிமனையின்ர சுவர்களைப் பிரிச்சு, பிழந்து கொண்டு எத்தின அரச மரங்கள் முளைச்சு நிக்குதெண்டு தெரியுமோ?

அதுசரி, அரச மரங்கள் தானே! அது எங்கட வாழ்வையும் பிரிக்கும். வரலாறுகளையும் பிரிக்கும். அது தெரிஞ்ச விசயம்தானே.

ஏதோ கண் துடைப்புக்கு வெடிச்ச தூணுக்கு முட்டுக் குடுத்து விட்டிருக்கினம். ஐந்து நிமிச மழைக்கு கட்டடம் பேர்ந்து போச்சு தெண்டால், எப்படியெண்டு பாரன்.

பேராண்டி. எங்கட வரலாற்றுப் பொக்கிஷங்களை நாங்கள்தான் பாதுகாக்க வேணும். எங்கட ஆக்கள் பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் மாலைக்கும் மரியாதைக்கும் மேடையில நிப்பினம். கோடி கோடியாச் செலவழிப்பினம். ஆனால் எங்கட தமிழ் வரலாறுகளையும் சைவத்தின்ர தொன்மையையும் பாதுகாக்கிறதுக்குச் சல்லிக் காசையும் விடமாட்டினம். நீ இருந்து பார் பேராண்டி, இன்னும் ரெண்டு, மூண்டு வருசத்திலை மந்திரிமனை காணாமல் போகும். அதுக்குரிய வேலைகள் சுறுசுறுப்பா நடக்கிறது நல்லாத் தெரியுது.

மாவை.நா.கஜேந்திரன்

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அரசிளங்குமரி
பாடியவர்: ரி.எம்.சௌந்திரராஜன்
எழுதியவர்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
இசையமைத்தவர்: ஜி .ராமனாதன்



சின்னப்பயலே சின்னப்பயலே
சேதி கேளடா!
நான் சொல்லப்போற வார்த்தையை நல்லா
எண்ணிப் பாரடா நீ எண்ணிப் பாரடா!
(சின்னப்பயலே...)

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அது தாண்டா வளர்ச்சி! (2)
ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ
தரும் மகிழ்ச்சி! (2)

நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் பயிற்சி – உன்
நரம்போடு தான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி!
(சின்னப்பயலே...)

மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா – தம்பி
மனதில் வையடா!
வளர்ந்து வரும் உலகத்துக்கே – நீ
வலது கையடா – நீ
வலது கையடா!

தனியுடமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா! நீ
தொண்டு செய்யடா! (தனிமையுடமை)
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா – எல்லாம்
பழைய பொய்யடா!

வேப்பமர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு (வேப்பமர)
விளையாடப் போகும் போது
சொல்லி வைப்பாங்க – உந்தன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க!

வேலையற்ற வீணர்களின்
மூளையற்ற வார்த்தைகளை (வேலையற்ற)
வேடிக்கையாகக் கூட நம்பி விடாதே! நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே! நீ வெம்பி விடாதே!

# 'ஊழலை ஒழிக்க'
## உலகின் முதல் AI அமைச்சர்

டெக்னோலஜியில் இது ஏஐ யுகம்! எங்கு பார்த்தாலும் ஏஐ பற்றிய பேச்சுகளும் விவாதங்களுமே நிரம்பியிருக்கின்றன. இந்த ஏஐ தொழில்நுட்பத்தைத் தினசரி ஏதோவொரு வகையில் நாமும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் (ஏஐ) மனிதன் செய்யும் பணிகளை முழுமையாகச் செய்துவிட முடியாது என்றாலும், 'ஏஐ தொழில்நுட்பத்தால் நம் வேலைக்கு ஆபத்து வந்துவிடுமோ?' என்ற அச்சம், பல்வேறு துறையினரிடமும் இருக்கிறது. இந்த அச்சம் ஒரு துளி கூட இல்லாதவர்களாக அரசியல்வாதிகளே இருந்துவந்தனர். அப்படியான அரசியல்வாதிகளுக்கும், உலகின் முதல் ஏஐ அமைச்சரை அறிமுகப்படுத்தி அதிர்ச்சி கொடுத்திருக்கிறது அல்பேனியா அரசு!

உலக நாடுகளில் நடைபெறும் ஊழல் குறித்து ஆய்வுசெய்யும் `Transparency International' அமைப்பு. ஊழல் குறியீட்டுப் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்தப் பட்டியலில், 100 மதிப்பெண்களுக்கு 42 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறது அல்பேனியா. 'பார்டரில் பாஸ் செய்திருக்கிறது அல்பேனியா. இதே நிலை நீடித்தால், அங்கு ஊழல் தீவிரமடையும்' என்ற எச்சரிக்கையும் இந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருந்தது. இதை உணர்ந்த அல்பேனியா அரசு, சில திட்டங்களை வகுத்தது.

குறிப்பாக, டெண்டர் வழங்கும் துறையில்தான் ஊழல் அதிகமாக நடைபெறுகிறது என்பதை அரசு கண்டறிந்தது. பணத்தைப் பெற்றுக் கொண்டு டெண்டர் ஒதுக்குவது, வேண்டியவர்களுக்கு டெண்டர் ஒதுக்குவதால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துவது எனப் பல்வேறு மோசடிகள் நடைபெறும் பொதுப்பணித்துறையை முதலில் சரிசெய்ய முடிவெடுத்தது அல்பேனியா அரசு. இதற்காக ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் முடிவு செய்தது.

ஜனவரி 2025இல், அல்பேனியா மக்களுக்கு அரசு வழங்கும் சேவைகளை இணைய வழியில் எளிமைப்படுத்த, ஏஐ தொழிநுட்பம் ஒன்றை மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கியது அல்பேனியா அரசு. இந்தத் தொழில்நுட்பத்துக்கு 'டியல்லா' என்று பெயர் சூட்டியது அந்நாட்டு அரசு. அல்பேனிய மொழியில் 'டியல்லா' என்றால் 'சூரியன்' என்று அர்த்தமாம்.

டியல்லாவுக்கு உருவம் கிடையாது என்றாலும், அல்பேனியப் பெண்களின் பாரம்பரிய உடையுடன் டியல்லாவின் கற்பனைப் புகைப்படம் ஒன்றை அல்பேனியா அரசு வெளியிட்டது. தற்போது, டியல்லாவின் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்தி, அதைப் பொதுப்பணித்துறை அமைச்சராக்கியிருக்கிறது அரசு.

அல்பேனியாவின் பிரதமர் எட்வின் ரஹ்மா, "கடந்த ஜனவரியிலிருந்தே மக்கள் சேவையில் ஈடுபட்டுவரும் டியல்லாவுக்கு எனது அமைச்சரவையில் இடமளித்திருக்கிறேன். உலகின் முதல் ஏஐ அமைச்சரை நாம்தான் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இனி, அரசு டெண்டர்களில் 100% ஊழல் இருக்காது" என்று



மார்தட்டியிருக்கிறார். 'டெண்டருக்கு வரும் விண்ணப்பங்களை இனி டியல்லாவே ஆய்வு செய்து நியாயமான முறையில் ஒப்புதல்களை வழங்கும். டெண்டர்கள் வழங்குவதற்கான கால அவகாசமும் இனி வெகுவாகக் குறையும்' என்கிறது அரசுத் தரப்பு.

டியல்லாவை அமைச்சராக நியமித்ததை வரவேற்பவர்கள், "பிரதமரின் இந்தத் துணிச்சலான முடிவால், இனி டெண்டர் வழங்குதலில் வெளிப்படைத்தன்மை இருக்கும். ஊழல் வெகுவாகக் குறையும்" என்கின்றனர்.

இதை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளோ, "அரசின் இந்த முடிவு அல்பேனிய அரசியல் சாசனத்துக்கு எதிரானது. 'அமைச்சரவையில் இடம்பெறுபவர்கள் அல்பேனியக் குடிமகனாக இருக்க வேண்டும் அவருக்கு 18 வயது நிரம்பியிருக்க வேண்டும்' என்ற சட்டதிட்டங்களையெல்லாம் மீறி அரசு இதைச் செய்திருக்கிறது. டியல்லாவை உருவாக்கியது அரசுதான் எனும் போது, அது அரசுக்குச் சாதகமான முடிவுகளை எடுக்கும் வண்ணமே உருவாக்கப்பட்டிருக்கும்.

பிரதமர் ரஹ்மா செய்யச் சொல்லி, புரோகிராம் செய்த விடயங்களையே டியல்லா செய்யும். எனவே, இதிலும் வெளிப்படைத் தன்மை இருக்காது. இது ஒரு அரசியல் ஸ்டன்ட் மட்டுமே" என்கிறார்கள் கொந்தளிப்புடன்.

தொழில்நுட்ப வல்லுநர்களோ, "மனித சார்பு இல்லாமல், லஞ்சம் பெறாமல் டெண்டர்களை டியல்லா ஒதுக்கினாலும், ஏஐ தொழில்நுட்பத்தில் ஒரு சிறு கோளாறு ஏற்பட்டாலும், அது அரசையே புரட்டிப்போட்டுவிடும் அபாயம் இருக்கிறது. மனிதர்களின் பழக்கவழக்கங்களில் ஒன்றாக மாறிவிட்ட ஊழலை, ஏஐ தொழில்நுட்பம் மூலம் அவ்வளவு எளிதில் ஒழித்துவிட முடியாது. குறுகிய காலம் வேண்டுமானால், டியல்லாவை வைத்து டெண்டர் விவகாரத்தில் ஊழலைத் தடுக்கலாம். இன்னும் சிலகாலம் சென்றால், டியல்லாவை ஏமாற்றும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துவிடுவார்கள்.

ஊழல்வாதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற, ஏஐ தொழில்நுட்பத்தால்கூட முடியாது போல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்வாதிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய
# கணக்காய்வாளர் லலித் அம்பான்வல

தேசிய கணக்காய்வுச் சட்டத்தைப் பற்றி பேசும்போதெல்லாம், எமது இலங்கை நாட்டிலே இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும், அதில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் ஆதாரகாரணமாய் இந்த ஒரு நேர்மையான - துணிச்சலான அதிகாரியினுடைய வாழ்க்கையையும் போராட்டத்தையும் பற்றிப் பேசாமல் நம்மால் கடந்து போக முடியாது. சத்தியமே வாழ்க்கையென வாழ்ந்த அந்த அதிகாரியின் பெயர் லலித் அம்பான்வல (*Lalith Ambanwela* ) அதிகாரியின் சரித்திரத்தைத் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

**தேசிய கணக்காய்வுச் சட்டம் குறித்து லலித் அம்பான்வலவின் பங்கு.**

லலித் அம்பான்வல என்ற தனிநபரின் போராட்டம்தான் சிவில் அமைப்புகளுக்குத் தேசிய கணக்காய்வுச் சட்டம் என்ற ஒன்றைப் பற்றி யோசிக்கவும் அறிமுகப்படுத்தவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் காரணமானது. தேசிய மக்கள் சக்தி அரசு மிக அண்மையில் செய்த சட்ட சீர்திருத்தங்கள் லலித் அம்பான்வல என்ற, இப்போது இறந்துபோன அதிகாரிக்கு மேலும் கீர்த்தியையும் மரியாதையையும் கொடுத்திருக்கின்றன.

**லலித் அம்பான்வலவினால் கண்டுபிடித்த முக்கிய மோசடிகள்**

அந்த ஒற்றைக் கண்ணுடன் லலித் அம்பான்வல அவர்கள் சொன்ன சாட்சிதான் இன்று கரம்போட் ஊழலில், முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அலுத்கமகேக்கு 20வருட சிறைத்தண்டனையும் நலின் பெனாண்டோவுக்கு 25வருட கடூளிய சிறைத்தண்டனையும் வாங்கி கொடுத்துள்ளது. இது தவிர அச்சுத் திணைக்களத்தில் நடந்த 6 கோடி மோசடி, மத்திய கலாசார புது நிதியத்தில் நிகழ்ந்ததாய் கூறப்படும் 5கோடி மோசடி, 70 கோடி ரூபா பெறுமதியான உரமோசடி, விவசாய அமைச்சில் நடந்த ஊழல் என்று அத்தனையையும் லலித் அம்பான்வல அம்பலப்படுத்தினார்.

**லலித் அம்பான்வல மீது நடந்த தாக்குதல்**

அரசு சேவையில் 1986 ஆம் ஆண்டு இணைந்த லலித் அம்பான்வலவின் பொது வாழ்வு பட்டுப்பாதையாக அமையவில்லை. யாரோடும் சமரசம் செய்யாத, எந்த அழுத்தத்திற்கும் அடிபணியாத, அதிகாரிக்கு என்றைக்கும் சொகுசு பயணம் அமையப்போவதில்லை. லலித் அம்பான்வல மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பணி செய்ய ஆரம்பித்த முதல் நாளே உதவி கல்விப் பணிப்பாளரும் தலைமைக் கணக்காளரும் அம்பான்வலவிடம் பேரம் (டீல்) பேச முயன்றார்கள். லலித் அம்பான்வலவுக்கு ஓர் இராசி இருக்கிறது. அவரால் எந்த இடத்திலும் நீண்ட நாளைக்குப் பணி செய்யமுடியாது. கெஞ்சிப் பார்ப்பார்கள், கொஞ்சிப் பார்ப்பார்கள், லலித் அம்பான்வல வாழ்நாளில் சம்பாதிக்கவே முடியாத ஒரு தொகை இலஞ்சமாகவும் பேசுவார்கள். லலித் அம்பான்வல மசியமாட்டாராம். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அவரை இடமாற்றம் செய்து கொண்டே இருப்பார்கள். மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் லலித் அம்பான்வல உட்கார்ந்த உடனே 17.5 மில்லியன் ரூபாய் கணனி மோசடியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த தோடு மட்டுமல்லாது, தலைமைக் கணக்காளர் ஆனந்த வீரசிங்கவும் உதவி கல்விப் பணிப்பாளர் ஆனந்த குணசிங்கவும் இதற்கு உடந்தையாக இருப்பதை கண்டுபிடித்தார்.

இந்த ஊழல் மோசடியின் பின்புலத்தில் இருந்த வர்த்தகப் புள்ளிகள் லலித் அம்பான்வல மீது தீராத வன்மம் கொண்டார்கள். லலித்



அம்பான்வல, இவர்கள் போடும் தாளத்துக்கு ஆடுபவர் கிடையாது. ஆகவே பொறுத்துப் பொறுத்துப் பார்த்த இவ் வர்த்தகர்கள் லலித் அம்பான் வலவைத் தீர்த்துக் கட்ட முடிவெடுக்கிறார்கள். 20.05.2002 அன்று கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அருகே உள்ள சுற்றி வளைந்து செல்லும் வட்டத்தடியில் (ரவுண்ட எபௌட்) லலித் அம்பன்வல தன்னுடைய காரில் வந்து கொண்டு இருந்த போது அவர்மீது படுகுரூரமாக அசிட் வீசப்பட்டது.

**DIG ஆன நிமல் மெடிவேகா, குற்றவாளிகளை இனம்கண்டமை.**

உடனே 119 அவசர தொலைபேசி இலக்கம் வழியாகக் கண்டி பொலிஸ் தலைமையகத்துக்குச் செய்தி பறந்தது. அப்போது மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பாய் இருந்தார் கீர்த்திமிகு பொலீஸ் DIG ஆன நிமல் மெடிவேகா (*Nimal Medi weka*) தாக்குதலுக்குள்ளான லலித் அம்பான்வலவின் பின் புலம் சட்டத்திற்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டு யாருக்கும் பணியாமல் அவர் வாழ்ந்தது வாழ்வு, சந்தித்த கொலை மிரட்டல் பற்றிய முழு விபரத்தையும் பெற்றுக் கொண்ட பொலிஸ் *DIG* நிமல் மெடிவேகா குற்றவாளிகளை மிகக்குறுகிய காலத்தில் இனம்கண்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தினார். பத்து வருடங்கள் இழுத்தடித்த இந்த வழக்கு 2012 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. இன்றைய பிரதம நீதி அரசராய் இருக்கும் பிரீதி பத்மன் சூரசேன (*Preethi Padman Surasena* )தான் அன்று கண்டி மாவட்ட உயர் நீதி மன்ற நீதி பதியாய் இருந்தார்.

**நீதிமன்றத் தீர்ப்பு**

மாண்புமிகு நீதியரசர் பிரீதி பத்மன் சூர சேன வின் தீர்ப்புகள் எல்லாமே அதிரடியானவை. அவர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் உதவி கல்வி பணிப்பாளர் ஆனந்த முனசிங்க, முன்னாள் தலைமைக் கணக்காளர் ஆனந்த வீரசிங்க, வர்த்தகர்களான மொஹமட் ராசீக் ரெஹான், *M.* செயாடு, மிஹமெட் ராசக், *H.G.O.L.M* மொக மட் நிலூபர், *M.M.R* இப்லூர் இராமான் மற்றும் *M.M* இம்தி யாஸ் ஆகியோர் லலித் அம்பான்வல அவர்களுக்கு அசிட் வீசிய குரூரத்தின் பிரதான குற்றவாளிகளாக இனம் கண்டார்.

ஒரு கண்ணை முற்றாய்ப் பறிகொடுத்து முகம், மார்பு, கைகள், சிறுநீரகம் உள்ளிட்ட இடங்களில் கட்டுமையான காயங்களுக்குள்ளான, லலித் அம்பன்வல அவர்களுக்குச் செய்த இந்த மனிதக்குல விரோத இழிச்செயலுக்கு, இந்த குற்றவாளிகளுக்குப் பத்து முதல் 70 ஆண்டுகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. லலித் அன்பன்வல மீண்டும் பணிக்குத் திரும்ப 7 ஆண்டுகள் எடுத்தன. இக்குற்றவாளிகள் கண்டி உயர்நீதி மன்றம் கொடுத்த தண்டனையை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேன் முறையீடு செய்தபோது உச்ச நீதிமன்றம் இவர்களுக்கான தீர்ப்பை உறுதி செய்து வழக்கை தள்ளுபடி செய்தது.

**தேசிய விருது**

லலித் அம்பன்வலவுக்கு நேர்மைக்காகப் பணியாற்றிய தற்காக மற்றும் ஊழல் எதிர்ப்பு போராட்டத்திற்குத் தேசிய விருதும் 2004 ஆண்டு வழங்கப்பட்டது. ஆனால் பணி ஓய்வு பெற்ற பின்னர் நான்கு ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு 2021 ஆம் ஆண்டு லலித் அம்பன்வல இறந்து போனார். உலகத்தில் கொடிய வன்முறை நல்லவர்களின் மௌனம் என்று சொல்வார்கள். நல்லவர்கள் தமதும், தம் குடும்பத்தினதும் பாதுகாப்புக்கருதி மௌனமாக இருக்கக் காரணமே சட்டமும் நீதியும் சமையலறைக்குள் ஒழிந்து கொள்வதால்தான். இதனால்தான் அரச துறையில் இருந்த எக்கச்சக்கமான நேர்மையான அதிகாரிகள் தங்களுடைய ஐம்புலன்களையும் மூடிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் அந்த யுகத்திலும் ஊழல் மோசடிக்காகப் போராடியவர்களுக்கு எந்த அளவுக்கு நெஞ்சுரமும் தைரியமும் இருந்திருக்க வேண்டும்.

**2018ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் முக்கிய அம்சம்**

உண்மையில் 2018 ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் நாட்டில் வேரூன்றிப் போயிருந்த ஊழல் மோசடியை எதிர்த்துப் போராடக் கணக்காய்வுச் செயன்முறையை வலுப்படுத்தியது. ஆனால் நிதி முறைகேடுகளுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீதும் தண்டப்பணம் அறவிடும் அதிகாரத்தைக் கணக்காய்வாளர் ஜெனரலுக்கு வழங்க எந்த வித சட்ட ஏற்பாடுகளும் இந்த சட்ட மூலத்திலே அன்று இருக்கவில்லை. கடந்த ஏழு வருடங்களாக இழுத்தடிக்கப்பட்ட இந்த விவகாரத்துக்கு அண்மையில் தீர்வு கிடைத்து விட்டது. அண்மையில் பாராளுமன்றத்தில் மிக முக்கியமான ஒரு சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அதாவது 2018 ஆம்ஆண்டு ஆடி மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறை வேற்றப் பட்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்துக்கு மேலும் திருத்தங்கள் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்திருத்த நிறைவேற்றத்தின் மூலம் கணக்காய்வுச் செயன்முறையை வலுப்படுத்தியது மற்றும் ஓடிற்றர் ஜெனரலுக்கு வழங்கப்படும் அதிகாரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இனிமேல் பொதுப் பணத்தை விழுங்க துணைபோகும் எந்த ஓர் அதிகாரியும் தப்ப முடியாது. இன்றைய ஆட்சியில் இலஞ்ச ஊழல்கள் குறைந்திருப்பதாகவும் சேவைகளின் தரம் அதிகரித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதற்கு இன்றைய அரசியல் தலைமை ஒரு காரணம் என்றால், வீரியமுடன் இயங்கிக்கொண்டு இருக்கும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு திணைக்களம் மற்றொரு காரணம்.

இலங்கைச் சரித்திரத்தில் என்றைக்கும் இல்லாதவாறு, சுயாதீனமாய் இயங்கிக் கொண்டு இருக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் நீதித்துறையும் எல்லாவற்றுக்கும் ஆதாரகாரணம். ஒட்டுமொத்த அரசு சேவைக்கும் பிரம்மஸ்திரத்தை ஏவி காயடிப்பவர்களுக்கு ஓர் உண்மையை சொல்ல வேண்டியிருக்கிறது. முதுகெலும்புடன் யாருக்கும் தலை வணங்காமல் எந்த ஊழல் பெருச்சாளிக்கும் சலியூட் அடிக்காமல் பணி ஓய்வு பெற்ற நூற்றுக் கணக்கான அரச ஊழியர்கள் எல்லா ஆட்சியிலும் இருந்தார்கள். எத்தனையோ லலித் அம்பன்வல போன்ற அதிகாரிகள் பொதுப்பணத்தில் ஒரு சதமும் ஊழல் செய்யாது எந்த விதக் குற்ற நிழலும் தம் மீது படியாமல் நிம்மதி பெருமூச்சுடன் தினமும் வீடு செல்பவர்கள் இருக்கிறார்கள்.

இந்த மாதிரி அதிகாரிகள் வேலை செய்வதற்கான அதிகாரமும் வாய்ப்பும் வளங்களும் வழங்கப்பட வேண்டும். ஒரே ஒரு லலித் அம்பன்வலவால் இத்தனை சாதனை புரிய முடியும் என்றால் இதைப் போன்று நூறு லலித் அம்பன்வல சேர்ந்தால் இந்த நாட்டைப் புனிதப்படுத்தி நிமிர்த்தி எடுக்கலாம். (*S.K Kiruththikan* வலையொளிப் பதிவிலிருந்தும் *Daily Mirror online* பதிவிலிருந்தும் தொகுக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த வீடு அமைய இராசிப்படி பரிகாரங்கள்!



**மேஷம்:** செவ்வாய்க்கிழமைகளில் முருகனுக்கும் அங்காரகனுக்கும் நெய் தீபம் ஏற்றி, செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

**ரிஷபம்:** ஞாயிறன்று நவக்கிரகச் சூரியபகவானுக்குச் செம்பருத்தி மலர்களால் அர்ச்சனை செய்வது சிறப்பு.

**மிதுனம்:** புதன்கிழமைகளில் புதன் பகவானுக்கு பச்சை வஸ்திரம் சாத்தி, நெய் தீபம் ஏற்றி, பச்சைப் பயறு சுண்டல் நைவேத்தியம் செய்து, பக்தர்களுக்கு விநியோகிக்கலாம்.

**கடகம்:** 6 வெள்ளிக்கிழமைகள், சுக்ர பகவானுக்கு நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபடுவது சிறப்பு.

**சிம்மம்:** செவ்வாய்க்கிழமை, சஷ்டி திதி அல்லது கிருத்திகை நட்சத்திரம் சேர்ந்து வரும் நாளில் சர்க்கரைப் பொங்கல் படைத்து, குமாரஸ்தவம் படித்து முருகப்பெருமானை வழிபடலாம்.

**கன்னி:** வியாழனன்று குரு பகவானுக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி, மஞ்சள் மலர்களால் அர்ச்சனை செய்து, நெய் தீபம் ஏற்றி வழிபடலாம்.

**துலாம்:** 7 சனிக்கிழமைகள் ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாத்தி, வழிபட வேண்டும்.

**விருச்சிகம்:** 9 வாரங்கள்- செவ்வாய்க்கிழமைகளில், சனிபகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி, அர்ச்சனை செய்ய வேண்டும்.


**தனுசு:** வியாழக்கிழமையன்று குருபகவானுக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி வழிபட்டால், சொந்த வீட்டில் வசிக்கும் யோகம் ஏற்படும்.

**மகரம்:** செவ்வாய்க்கிழமையன்று செவ்வாய் பகவானுக்கு அபிஷேக - அர்ச்சனை செய்து வழிபட வேண்டும்.

**கும்பம்:** 3 வெள்ளிக்கிழமைகள் முருகனுக்குப் பாலபிஷேகம் செய்து வழிபடுவதுடன், செவ்வாய் பகவானுக்கு நெய் தீபம் ஏற்ற வேண்டும்.

**மீனம்:** தொடர்ந்து 5 புதன்கிழமைகள் பெருமாளுக்குத் துளசியாலும் தாயாருக்கு மஞ்சளாலும் அர்ச்சனை செய்ய வேண்டும்.

# அடுக்களைப் பக்கம்



✦ **பா**கற்காயை நறுக்கி, காய வைத்து தூளாக்கிக் கொண்டு, அதில் ஒரு கரண்டி தூளை ஒரு டம்ளர் சூடான நீரில் கலந்து குடித்தால் வயிற்றுப்புண் சீக்கிரம் சரியாகும்.

✦ **ப**ஜ்ஜி செய்யும் போது கடலை மா, அரிசி மாவுடன் ஒரு பங்கு மைதா மா சேர்த்தால், பஜ்ஜி உப்பலாக இருக்கும்.

✦ **மு**ழு பீட்ரூட்டை நீரில் கழுவி குக்கரில் வேக வைத்து எடுத்து, அதன் தோலை உருளைக் கிழங்கின் தோலை உரிப்பது போல உரித்தால் எளிதாக உரிக்கலாம்.

✦ **எ**லுமிச்சைச் சாற்றை நீண்டநாட்கள் கெடாமல் வைத்திருக்க, ஐஸ் கியூப் ட்ரேயில் சாற்றைப் பிழிந்துவிட்டு ஃப்ரீசரில் வைத்தெடுங்கள். பிறகு கியூப்களை எடுத்து ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டு மூடி, ஃப்ரீசரில் வைத்திருந்தால் நீண்டநாட்களுக்கு உபயோகப் படுத்தலாம்.



# பிரெட் சாண்ட்விச்



## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை:



பிரெட் துண்டு – 4

பெரிய அளவு உருளைக்கிழங்கு – 2 (வேக வைக்கவும்)

வெங்காயம் – 1 (நறுக்கிக் கொள்ளவும்)

இஞ்சி – பூண்டு அரைத்தது – ஒரு கரண்டி

மிளகாய்தூள் – அரைக் கரண்டி

மிளகுத்தூள் – அரைக் கரண்டி

எண்ணெய், உப்பு – தேவையான அளவு

### செய்முறை


**வா**ணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி சூடானதும் பொடியாக நறுக்கிய வெங்காயம் போட்டு நன்கு வதக்கியதும் இஞ்சி - பூண்டு அரைத்தது, மிளகாய்தூள், மிளகுத்தூள், உப்பு போட்டு வதக்கவும். பிறகு, அதில் வேக வைத்த உருளைக்கிழங்கை நன்கு மசித்துப்போட்டு கிளறி, வதக்கி எடுத்து வைத்துக்கொள்ளவும்.

பிரெட் டோஸ்டரில் மேலும் கீழும் வெண்ணெய் அல்லது நெய் தடவவும். ஒரு பிரெட் துண்டை அதில் வைத்து, அதன் மேல் உருளைக்கிழங்கு மசாலாவை வைத்துப் பரப்பவும். அடுத்து அதன் மேல் மற்றொரு பிரெட் துண்டை வைத்து மூடி சூடுபடுத்தவும். பிரெட் [illegible] ஆலு பிரெட் சாண்ட்விச் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான முறையில் முதிர்ச்சியடைய





> “நாம் 40 வயதிற்குச் செல்லும்போது நம்முடைய உடல் எடை சரியான அளவில் உள்ளதா, கொஞ்சம் அதிகமாக உள்ளதா அல்லது மிகவும் அதிகமாக உள்ளதா என்பதை முதலில் கண்டறிய வேண்டும்”

**ஆரோக்கியமான உடல் எடையில் இருந்தாலும் 40 வயதுக்கு மேல் உடலில் உண்டாகும் பிரச்சினைகள்:**

எலும்பின் வலிமை, தசை வலிமை, புரதம் மற்றும் கண்பார்வை இவை எல்லாம் குறைய வாய்ப்பு உள்ளது. இதற்கு ஏற்ப புரதம் நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சைவம் சாப்பிடுபவர்கள் பால், தயிர், பன்னீர் போன்ற பால் சார்ந்த பொருட்கள், பருப்பு வகைகள் மற்றும் கொட்டைகள் (Nuts) போன்றவற்றிலிருந்து புரதச்சத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பால் பொருட்கள் மற்றும் பருப்புகளிலிருந்தே அவர்களுக்குத் தேவையான விற்றமின்கள், கல்சியம் மற்றும் மக்னீசியம் கிடைத்துவிடும். அவர்கள் புரதம் குறைவாகச் சாப்பிடுவது போல் தெரிந்தால் அல்லது மூட்டு வலி உள்ளது, விற்றமின் D குறைவாக உள்ளது என்றால் மருத்துவரின் ஆலோசனையோடு விற்றமின் D மற்றும் புரத சப்ளிமெண்ட்ஸைத் தேவைக்கு ஏற்ப எடுத்துக் கொள்ளலாம்.

அசைவம் சாப்பிடுபவர்கள், இறைச்சி சாப்பிடும்போது அதிக கொழுப்பை உட்கொள்ள வாய்ப்பு உள்ளது. இதனால் வயதாகும் போது இதயத்தில் பிரச்சினைகள் வர வாய்ப்பு உள்ளது. அதனால் 40 வய திற்கு மேல் எண்ணெய் மற்றும் கொழுப்பின் அளவை குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதிக கொழுப்பை உட்கொள்வதால் உடல் எடை அதிகமாகி எலும்பின் வலிமை குறைதல், எளிதில் சோர்வடைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். மேலும் செரிமான பிரச்சினைகளும் வரக்கூடும். அதைச் சரி செய்ய புரோபயாடிக்குகள் நிறைந்த தயிர் போன்ற புளித்த உணவுகளைச் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம்.

**எடை அதிகமாக இருப்பவர்கள்:**

இவர்கள் தற்போது உள்ள எடையிருந்து 10% முதல் 15% வரை எடையைக் குறைக்க வேண்டும். அப்படி எடையைக் குறைக்காவிட்டால் முதலில் கால் வலி ஏற்படும். அதனால் நடைப்பயிற்சி செய்ய முடியாமல் போகும்போது தசைகள் வலிமை இழந்துவிடும். அதிகமாகக் காய்கறிகள், பருப்பு வகைகள், தானியங்கள் எடுத்துக்கொள்ளும் பொழுது இந்த பிரச்சினை இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

அதேபோல் வயது கூடும்போது 2 அல்லது 3 முட்டை மற்றும் அதிக இறைச்சி எடுத்துக்கொள்ளும் பொழுது இரத்தத்தில் கொழுப்பு அதிகமாகி இதயப் பிரச்சினைகள் வரும் வாய்ப்பும் உள்ளது.

**சாப்பிடக் கூடாதவை:**

வயது அதிகரிக்கும்போது இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் வர வாய்ப்பு இருப்பதால் கூல்டிரிங்ஸ், ஐஸ்கிறீம், பதப்படுத்தப்பட்ட உணவுகள், சர்க்கரை, உப்பு மற்றும் மைதா போன்றவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

**சாப்பிட வேண்டியவை:**

ஒரு நாளைக்குக் குறைந்தது 500 கிராம் காய்கறிகள், பழங்கள், 100 கிராம் பருப்பு வகைகள், அசைவம் சாப்பிடுபவர்கள் தினம் ஒரு முட்டை, வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் இறைச்சி, 20 கிராம் முதல் 30 கிராம் வரை நட்ஸ் போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

**தினமும் செய்ய வேண்டிய செயல்கள்:** தினசரி வாழ்க்கையில் நடைப் பயிற்சி மிகவும் முக்கியமான ஒன்று! சீரான இரத்த ஓட்டம், தசை வலிமை, எலும்பு மற்றும் மூட்டு தேயாமல் ஆரோக்கியமாக இருக்கும். முடியும் எனில் குறைந்த அளவு உடற்பயிற்சி செய்யலாம். நிறையத் தண்ணீர் குடிப்பது அவசியம்! இவை அனைத்தையும் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடித்து, சரிவிகித உணவை உட்கொள்வதன் மூலம் உடல் எடையையும் ஆரோக்கியத்தையும் சீராக்கி ஆரோக்கியமான முதிர்ச்சிக்கு வழி வகுக்கலாம்.

# தெளிவே என் சிந்தனையுள்... 28

ஓர் அறிஞர் திருமணத்தின் சிறப்புக்கள் பற்றி மேடையில் பேசிக்கொண்டிருந்தார்.

திருமணம் உங்கள் வாழ்வையே மாற்றி விடும் என்று அவர் கூற, கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து “ஆமாம் அது உண்மைதான். திருமணம் என் வாழ்வையே மாற்றி விட்டது” என்றார்.

உடனே அறிஞர். அவரை மேடைக்கு அழைத்து, அவரின் அனுபவம் பற்றிக் கூறச் சொன்னார்.

மேடைக்கு வந்த அவர், திருமணத்திற்கு முன்பு என்னை எவரும் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால் இப்போது என்னைப் பலர் தேடுகிறார்கள் என்றார்.


அது எப்படி விளக்கும்படி கேட்டார் அறிஞர். ஆமாம் ஊரே பாராட்ட வேண்டும் என நினைத்து எனது சக்திக்கு மீறிக் கடன் வாங்கி திருமணம் செய்தேன்.

அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் இன்று திண்டாடிக் கொண்டிருக்கிறேன்.

கடன் கொடுத்தவர்கள் பலர் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றார் அந்த நபர்.

**அன்பானவர்களே!**

“விரலுக்கு ஏற்றதே வீக்கம்” என்பார்கள். எமது சக்திக்கு மீறி அடுத்தவரைத் திருப்திப்படுத்த செலவு செய்வோமாக இருந்தால் அது நிச்சயம் நிம்மதியற்ற வாழ்வையே தரும்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

70

## செங்கை ஆழியான்

விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டொன்று புல்டோசரின் முன் பகுதியைத் தாக்கியது. போராளிகள் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தபடி தென்புறக் கொத்தளத்தையடைந்தனர். அதில் பதின்மூன்று போராளிகள் களப்பலியாக நேர்ந்தது. கருணாநிதி, சரத்பாபு, விக்ரம் கெனடி, நிசாந்தன், அலீப், சபேசன், மோகன், எட்றிச் ஆகியோர் அக்களப்பலியானவர்களில் அடங்குவர்.

தொலைத்தொடர்பு நிலையப் பகுதியிலிருந்து வடமேற்குக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்றும் முயற்சியிலீடுபட்டவர்களில் யசோ, பில்லா ஆகிய போராளிகள் பலியாகினர்.

காயமடைந்து மயக்க நிலையில் உயிருடன் இருந்த பெண் போராளி ஒருவர் காலையில் மயக்கம் நீங்கியும் வெளியேற முடியாத நிலையில் அடுத்தநாள் இரவு, ஏறக்குறைய 15 மணி நேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

16, ஜூன், 1990 ஆம் நாள் யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் 27 போராளிகள் களப்பலியாகினர்.

யாழ்ப்பாணக்கோட்டை முற்றுகை ஸ்ரீலங்கா அரசிற்குப் பெருந்தலையிடியாக அமைந்தது.

"கோட்டையை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கே யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் இருக்கும்" என்பது போன்ற தன்மானக் கருத்துக்களையும் அரசு சார்பில் அவர்கள் கூறிக் கொண்டனர். எனவே கோட்டை விடயம் ஒரு கௌரவப் பிரச்சினையாக மாறியது.

கோட்டைக்குள் அகப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரைப் போசிப்பதும். அதற்காக நாளந்தம் யாழ்ப்பாணப் பகுதியில் விமானக் குண்டு வீச்சைத் தொடர்ச்சியாகச் செய்வதும் பெருஞ் செலவினைத் தரும் நடவடிக்கையாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கோட்டைக்குள் அகப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் ஒரு கட்டத்தில் தம் இயலாமை காரணமாக புலிகளிடம் சரணடைந்து விடுவார்களோ என அச்சமும் தலைதூக்கியதால் ஸ்ரீ லங்கா அரசு கோட்டை முற்றுகையைத் தகர்ப்பதற்குப் பெருந் திட்டமொன்றினை உருவாக்கியது.

அதுவே, "ஒப்பரேசன் போர்ட்" ஆகும். யாழ் கோட்டைக்கு நேரெதிரே மண்டைதீவு இருக்கிறது.

கோட்டைக்கும் மண்டைதீவுக்கும் இடையில் சிறுதீவு எனப்படும் நிலப்பகுதியுள்ளது. யாழ்ப்பாணக்கடனீரேரி மண்டைதீவுக்கும் கோட்டைக்கும் இடையில் ஆழங்குறைந்த கடலாகவுள்ளது.

(தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்

இரண்டாம்பாகம்



காலத்தின் பதிவு-170

## கடற்புறா

எந்தப் பக்கம் இழுபட்டாலும், எந்தப் பக்கத்தில் அதன் ஆசை நிறைவேறினாலும், அதில் பூர்த்தியிருக்காதென்பது மட்டும் உண்மை. ஆனால் மஞ்சளழகி, இப்போது என் மனம் காதலில் சிக்கவில்லை. இந்த அக்ஷயமுனையின் நலத்தில், உன் க்ஷேமத்தில் சிக்கியிருக்கிறது.

ஆகவே சொல், உன் தந்தை என்ன சொன்னார் என்று?" என அந்தத் தழுவலிலேயே வினவவும் செய்தான்.

அவன் மார்பில் தலையைப் புதைத்த வண்ணம் மஞ்சளழகி தனக்கும் தன் தந்தைக்கும் நடந்த சம்பாஷணையை விவரித்தாள். இளையபல்லவன், மஞ்சளழகி! நீ என்னிடம் வைத்திருக்கும் நம்பிக்கை இணையற்றது. அந்த நம்பிக்கைக்கும் உன் காதலுக்கும் நானும் பாத்திரமாக வேண்டும். ஆகவே, உன்னை நம்பிச் சொல்கிறேன். உன் தந்தை யாரென்பது எனக்குத் தெரியும் என்று மெதுவாகக் கூறினான்.

அதைக் கேட்டதும் துடித்து மஞ்சத்திலிருந்து எழுந்த மஞ்சளழகி, "யார்? யார் என் தந்தை?" என்று குரல் நடுங்க வினவினாள். அந்த எழில் உடலின் இடையைப் பிடித்துக் கைகளால் இழுத்து மீண்டும் அருகே அமர்த்திக்கொண்ட இளையபல்லவன், "அவசரப்படாதே மஞ்சளழகி, இன்னும் ஐந்து நாள் அவகாசம் கொடு. சொல்கிறேன்," என்றான்.

"ஐந்து நாளா?" "ஆம். அமாவாசை இரவுவரை அவகாசம் வேண்டும்." அன்று என்ன நடக்கும்?

அக்ஷயமுனையின் கதி நிர்ணயிக்கப்படும். ஏன்? இன்றே சொன்னாலென்ன? சில அசௌகரியங்கள் இருக்கின்றன.

"என்ன அசௌகரியம்?" "பிறகு தெரியும் உனக்கு." "இதுதான் நீங்கள் என்னிடம் வைத்திருக்கும் நம்பிக்கையா?"

"நம்பிக்கைக் குறைவாலல்ல நான் எச்சரிக்கையாயிருப்பது. உன் நலனை முன்னிட்டுத்தானிருக்கிறேன்."

"விளங்கச் சொல்லுங்களேன்?" மஞ்சளழகி கெஞ்சினாள்.

இளையபல்லவன் சிறிது யோசித்தான். "நாளைக் காலையில் கடல்புறாவைப் பார்க்க வா மஞ்சளழகி. அங்கு பேசுவோம். நடக்கப்போவதை ஓரளவு சொல்கிறேன்" என்றான் படைத் தலைவன்.

"கடல்புறாவைப் பார்க்க நான் வரவில்லை. அதன் அழகை நீங்களே பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடையுங்கள்."

"அழகைப் பார்க்க வரச்சொல்லவில்லை மஞ்சளழகி. அதன் தளத்தில்தான் நாம் ரகசியமாகப் பேச முடியும். அந்த விசித்திரக் கப்பலை நீயும் பார்க்கலாம்.

மஞ்சளழகி துக்கத்துடன் தலையை ஆட்டினாள். "நாளை மாலை மரக்கலத்துக்கு வா. மஞ்சளழகி. உன் தந்தையின் இஷ்டப்படி நாளைக் காலையில் பகிட்பாரி ஸான் மலையிலுள்ள காவலைக் குறைத்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு இளையபல்லவன் வெளியேறினான்.

மஞ்சளழகி அன்றிரவு உறங்கவில்லை. புரியாத எத்தனையோ விடயங்கள் அவள் மனத்தையும் வாட்டி வதைத்தன. மறுநாள் மாலை இளையபல்லவன் சொற்படி மஞ்சளழகி கடல்புறா இருக்குமிடம் சென்று கண்டியத் தேவன் உதவியுடன் அதன் தளத்தில் ஏறி அக்ரமந்திரத்தில் நுழைந்தாள். அன்றைய மாலைக்குப் பிறகு மஞ்சளழகி காணப்படவேயில்லை. அவள் எங்கு மறைந்து போனாள் என்பது யாருக்கும் தெரியவில்லை. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்திரை டைரி

## பார்வதி





**ரி.விக்கு ரூட்?:** ஈவென்ட் மேனேஜ்மென்ட் கம்பெனிகளில் சின்னச் சின்ன வேலைகள் செய்தேன். விருது விழாக்களில் பிரசன்டரிடம் அவார்டை எடுத்துக் கொண்டு போய் கொடுக்க மேடை ஓரத்திலேயே பெண்கள் நிற்பார்களே, அதே வேலைதான். ஒரு நாள் ஹோஸ்ட் ஒருவர் திடீர் என்று ஆப்சென்ட் ஆக, மைக் நம் கைக்கு வந்துவிட்டது. ஆங்கர் ஆனது அப்படிதான்.

**ஆச்சரியப்படுத்திய சம்பவம்:** சின்ன வயதில் தேவயானி மேடம் ஐ ரொம்பவே பிடிக்கும். "கோலங்கள்" தொடரை நாள் விடாமல் பார்த்தேன். என் முதல் சீரியலான "புதுப் புது அர்த்தங்கள்"ல அவருக்கு நான் மருமகள். அடுத்ததாக "எதிர் நீச்சல்" வாய்ப்பு, "கோலங்கள்" இயக்கிய திருச்செல்வம் சேர் தந்தது. என்ன ஒரு கனெக்டிவிட்டி பாருங்கள்.

**பொழுதுபோக்கு:** நாய் வளர்க்கிறது. வெளிநாட்டு நாய்கள் என்று நினைக்காதீர்கள். சென்னையில் நான் வசிக்கின்ற வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த தெருநாய் குட்டி போட்டது. இரண்டு குட்டிகளை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் வளர்க்கின்றேன்.

## சிவாங்கி



**பாட்டா... ஹோஸ்ட்டா... எதுக்கு முன்னுரிமை?:** என் முதல் அடையாளம் பாட்டுதான். ஹோஸ்ட் ஆனது திடீர் இன்சிடென்ட் என்று சொல்லலாம். கொவிட் சமயத்தில் ரவூஃபா மேடம்தான் அந்த ஏரியாவுக்குள் இறக்கி விட்டார்கள்.

**பிடித்த வெளிநாடு:** டுபாய். ஏன் என்று தெரியவில்லை, எத்தனை தடவை போய் விட்டு வந்தாலும் திரும்பத் திரும்பப் போகத் தூண்டுது.

**இந்தியாவில் பிடித்த இடம்:** கேரளா, சென்னை, விஜய் ரி.வி, மீடியா மேசன் அலுவலகங்கள். இன்னும் சில இடங்கள்கூட இருக்கிறது. லிஸ்ட் பெரிது.

**புதுதாக வாங்கியது:** கார் வாங்கியிருக்கிறேன். என்னுடைய முதல் கார். இந்த நேரத்தில் அப்பா, அம்மா, மாஸ்டர் எல்லோருக்கும் நன்றி சொல்ல ஆசைப்படுகிறேன். கூடவே என் ரசிகர்களுக்கும்தான். அவர்கள் இல்லாமல் நான் இல்லை.

**பிடித்த தத்துவம்:** வாழ்க்கை எதைத் தருகிறதோ, அதை ஏற்றுக்கொண்டு போய் கொண்டே இருக்க வேண்டும்.

# சினிமா துளிகள்



**"அசுரன்"** படத்தில் அசத்திய நடிகர் கருணாஸின் மகன், இயக்குநராகிறார். கதாநாயகனும் அவரே. பள்ளிக்கூடப் பின்னணியில் நடக்கும் கதை இது. ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு விரைவில் சென்னையில் தொடங்குகிறதாம்.



**கல்யாணி** பிரியதர்ஷன் நடிப்பில், ஹீரோயின் சென்ட்ரிக் படமான "லோகா: சாப்டர் 1", உலகளவில் ரூ.150 கோடியைத் தாண்டி வசூல் மழை பொழிந்துள்ளது. "லோகாவுக்கு இந்த அளவு பாராட்டு, வரவேற்பு கிடைக்கும் என நினைத்துக்கூடப் பார்க்கவில்லை கல்யாணி.



**டைரக்டர்** லோகேஷ் கனகராஜ், தான் கதாநாயகனாக நடிக்கும் படத்திற்கு ரெடியாகி விட்டார். இயக்குநர் அருண் மாதேஸ்வரனோடு தினசரி விவாதங்கள் நடக்கின்றன. அநேகமாக, ரஜினி, கமல் உட்பட டாப் ஹீரோக்கள் நிறைய பேர், இதில் கேமியோ ரோல் செய்யவும் வாய்ப்பிருக்கிறதாம்.



**"டூரிஸ்ட் ஃபேமிலி"** இயக்குநர் அபிஷன் ஜீவிந்த், இயக்குநர் மற்றும் நடிகர் சசிகுமார் இருவரும் மிகவும் நண்பர்களாகிவிட்டார்கள். அபிஷன், தன்னுடைய அடுத்தடுத்த படங்களின் கதையைச் சொல்லி சசிகுமாரிடம் ஆலோசனை கேட்டு அதன்படி நடக்கின்ற அளவுக்கு நட்பு பெருகியிருக்கிறதாம்.



**ரஜினி,** நெல்சன் கூட்டணியின் "ஜெயிலர் 2" படப்பிடிப்பு சென்னையில் மும்முரமாக நடந்து வருகிறது. "கூலி"யின் இறுதிக்கட்டப் பணிகளின்போதே, "ஜெயிலர் 2" தொடங்கியது போல, "ஜெயிலர் 2" இறுதிக்கட்டத்தின் போது, அடுத்த படத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளார் ரஜினி.



**தமிழில்** மூன்று படங்கள் கைவசம் வைத்திருக்கிறார் பகத் பாசில். அஜித் போல பகத்தும் ஒரு கார் பிரியர். ஏற்கெனவே லம்போர்கினி உருஸ், ரேஞ்ச் ரோவர், போர்ஷே உட்பட பல வெளிநாட்டுக்கார்கள் இவரிடம் உள்ளன. இந்நிலையில் புதிதாக 13 கோடி ரூபாய்க்கு பெராரி சொகுசு கார் ஒன்றை வாங்கியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல் 463
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான்

மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது ஏற்படும் அளவு கடந்த ஆறுதலும் அமைதியும் மனிதனுக்கு பேராற்றலையும், துல்லியமாகச் செயற்படும் திறனையும், நோய்களை எதிர்க்கும் வல்லமையும் வழங்கி நிற்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வ வல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

மனச்சஞ்சலங்களே பல நோய்களுக்கு வித்திடுகின்றன. இந்த மனச் சஞ்சலங்களை அகற்றும் அருமருந்தாய் அன்பு மிளிர்கிறது. எம்மீதும் எமது குடும்பத்தின் மீதும் அன்பு கொள்வோம்.

எமது சுற்றம், உறவுகள், நண்பர்கள் அனைவரும் மீதும் அன்பு கொள்வோம், ஊர், தேசம், மொழி, கலை, கலாசாரம் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம். உலாவி வரும் உயிர்களிலும் இயற்கையிலும் அன்பு கொள்வோம். இந்த அன்பினால் ஏற்படும் மன அமைதி உடலின் நோய் எதிர்ப்பு படைபலத்தைப் பெருக்கும்.


ஒருவரை விமர்சித்து மதிப்பிட்டு அவருடன் முரண்பட்டு கோபமுற்று போட்டியிட்டு அவரின் நடத்தைகளை மாற்ற முயன்று வாதிட்டு எமது மன அமைதியையும் நேரத்தையும் மனமகிழ்வையும் விரயமாக்குவது ஆரோக்கியம் ஆகாது. அதற்குப் பதிலாக அவரை அவரது தனித்துவங்களுடனும் குணாதிசயங்களுடனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சேர்த்துக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்வது பயன்தரும்.

வாதிட்டுப் பேசும் வார்த்தைகளிலும் பார்க்க மௌனங்கள் பலமானவை. பல அர்த்தங்கள் பொதிந்தவை. மௌனங்களும் மன்னிப்புகளும் பலரை சிந்திக்க வைத்து நல்வழிப்படுத்தும்.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு வைக்கும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதே சமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மைப் பிறர் வெறுப்பதற்குக் காரணம் என்ன? நாம் பிறரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமது எதிரியாக நாம் கருதிக் கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக்கொள்ள என்ன செய்யலாம்? சிந்திப்போம்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மைப்பலர் வெறுப்பதற்கும், நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படையாய், காரணமாய் இருப்பது என்ன என்பதை நாமே அறிந்து கொள்வது இலகுவான காரியமல்ல.

ஆனால் இந்த வெறுப்புணர்வுதான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் முதல் எதிரி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டியிருக்கிறது.



எதிரியிலும் அன்பு கொண்டு மன்னித்து எமது பாதையைத் தற்காத்து தடம் மாறாது பயணிக்கும் மனத்திடத்தை வளர்த்துக் கொள்வது உடல், உள, சமூக நன்னிலையான, உண்மையான ஆரோக்கியத்துக்கு வழி சமைக்கும்.

கோபமும், வெறுப்பும், பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும், ஆளுமையையும், வளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகின்றது. இந்தப் பொது எதிரியானவன் எமது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம் விட்டு விடுகின்றான்.

இந்த எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிப்பது ஒரு இலகுவான போர் அல்ல. பல தடவைகள் நாம் அந்த போரில் தோற்று விடுகிறோம். ஆனாலும் இந்தத் தோல்விகள் நிரந்தரமானவையல்ல.

அன்பு என்னும் பேராயுதத்தை சரியான முறையில் கையாளக் கற்றுக்கொண்டால் நாம் பல தொற்றா நோய்களையும் வாழ்வின் தடைகளையும் வெற்றி கொண்டு சுகமான விடியலை நோக்கிப் பயணிக்க முடியும்

**Dr.** சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

---

## உங்களுக்கு சிறுநீரகநோய் ஏற்பட்டுள்ளதை எவ்வாறு அடையாளம் காணலாம்?

ஆரம்ப கட்டத்தில் அறிகுறிகள் எதுவும் வெளிக்காட்டப்படமாட்டது.

ஆகவே பரிசோதனைகள் மூலமாக மட்டுமே இந்த நோய் கண்டறியப்படலாம்.

சிறுநீர் (புரதம் அல்லது அல்பியுமின்) மற்றும் இரத்தப் (கிறியற்றினின்) பரிசோதனை மூலம் சிறுநீரக நோயைக் கண்டறியலாம்.

சிறுநீரக நோய்க்கான சிகிச்சையானது உங்களது சிறுநீரக நோயின் கட்டம் மற்றும் உங்களுக்கு இருக்கும் ஏனைய மருத்துவப் பிரச்சினைகளைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அவற்றுக்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

K.K.S வீதி தெல்லிப்பளைச் சந்திக்கு அண்மையில் 8 ½ பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

**3 பிரிவாகவும் மொத்தமாகவும் விற்கப்படும்.**

தொடர்புகளுக்கு :

**077 161 1853**
**077 043 9822**

(5472)


# அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு ஜனவரி முதல் நடைமுறைக்கு

(கொழும்பு)

அரசு ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வரும் ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தப்படும் என்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, சிவில் விமான போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இருபத்தைந்து பேருந்து பணிமனைகளின் மேம்பாட்டுத் தொடக்க விழாவில் பங்கேற்றுப் பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், இந்த நிறுவனங்கள் பொதுமக்களுக்கு திறம்பட சேவை செய்யும் நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும்.

மேலும், பேருந்து நிலையங்களில் அதிக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஊழியர்களுக்கு அதற்கேற்ப அதிக சம்பளம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)


## வாகனத்துடன் சாரதி தேவை

உங்களிடம் முச்சக்கர வண்டி , மோட்டார்சைக்கிள், CAR, VAN இருந்தால் நீங்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றலாம். வெளிநாடு செல்ல உள்ளவர் நீங்கள் என்றால் Uber சேவையாளர் என்றால் எங்கும் வேலை / Visa கிடைக்கும். (Full Time / Part Time)

Uber Affiliate, இல.197B, பூங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் **0707555755**

(C-283)


# நாட்டில் அதிகரிக்கும் இணையவழி துஷ்பிரயோகங்கள்!

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு இது வரை, இணையவழி ஏமாற்றுதல் மூலம் 28 சிறுவர்களும் 118 பெண்களும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளையில், 2024 ஆம் ஆண்டில், 18 வயதுக்குட்பட்ட 15 சிறுவர்கள் இணையவழி மூலம் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

அதே ஆண்டில், 375 பெண்கள் இத்தகைய துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்ட 114 நபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## வேலைவாய்ப்பு

யாழ். நெல்லியடியில் இயங்கும் Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் (ஆண்/பெண்) தேவை.

O/L சித்தி கட்டாயம்.

(C-3924)

தொடர்பு:- **076 444 9377**

## வாகனத்துடன் சாரதி தேவை

உங்களிடம் CAR, VAN, LORRY இருந்தால் உங்களை எம்முடன் பதிவு செய்து உங்களுக்கான சவாரிகளை நாம் தருவோம் மாதாந்தம் 100,000/-இற்கு மேல் சம்பாதிக்க முடியும். (Full Time / Part Time)

(C-282)

PickMe, இல.210, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்

**0774737737 / 0769447737**

## வெளிநாடு செல்வதற்கான ஆங்கில கற்கைநெறிகள்

⇨ IELTS (Academic, General, UKVI, A1 & B1)

⇨ PTE Academic

(C-3927)

தொடர்புக்கு

**077 628 4845**

## மந்திகை சிலையடிப் பகுதியில் காணி விற்பனைக்குண்டு

வடமராட்சி மந்திகை சிலையடி, பெற்றோல் நிரப்பு நிலையம் என்பவற்றுக்கு முன்பாக 13 அடி பிரதான றோட்டை அடையும் பாதையுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

(1567)

**077 500 2162**

## மணமகள் தேவை

இந்து, கௌரவ குடும்பம், 1990 இல் பிறந்த, பூரம் நட்சத்திரம், 7 இல் செவ்வாய், கிரகபாவம் - 33 உள்ள அரச உத்தியோக மணமகனுக்கு 5 வயது வித்தியாசத்தில் அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

(5453)

**077 914 7318/076 668 8199**

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு.

வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது.

(5447)

**077 129 8159**

## மணமகள் தேவை

யாழ்.இந்து 1988 இல் பிறந்த ஆண் திருமணமாகாதவர் குற்றமற்ற ஜாதகம் உள்ள மிருகசீரிடம்-மிதுனராசி யாழில் வசிக்கும் யாழ்.நகரில் இலத்திரனியல் கடை உரிமையாளருக்கு மணமகள் தேவை.

தரகர்களும் அணுகலாம் (1560)

**078 911 3766**

## Play the Keys Play Your Dreams!



• சுவாரஸ்யமான, படிப்படியாகக் கற்றுத்தரும் பாடங்களின் மூலம் உன் இசைத் திறமையை வெளிப்படுத்து.

• தொடக்க நிலையிலிருந்து மேம்பட்ட நிலை வரை.

• உங்களுக்கு பிடித்த பாடல்களை இயக்கவும்

• தன்னம்பிக்கையும் படைப்பாற்றலும் வளர்த்து கொள்.

0777992769

Start your journey today- Play the music you love!

(5471)

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.

யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்

(முன்பதிவு செய்து வரவும்)

(5416)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் அமைதியான சூழலில் A/C உடன் கூடிய 4 அறைகள் விசாலமான இரு ஹோல்கள், சமையலறை, சாப்பாட்டு அறை, 2 இணைந்த குளியலறைகள், 1 பொது குளியலறை மற்றும் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

மாத வாடகை 80,000 (5468)

**077 711 0015**

## விற்பனையாளர் தேவை

கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலிப் பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனைக்கு ஆட்கள் தேவை.

(5463)

**077 078 2395**
**077 131 2534**

## வாடகைக்கு

யாழ்.நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியில் 2 மாடிக் கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு. கீழ்த்தளம் 210 சதுர அடியும் ஏனைய 2 மாடிகள் 200 சதுர அடி விஸ்தீரணமும் கொண்டது.

தனியார் நிறுவனங்கள் (கல்வி நிறுவனம், பினாஸ் நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

(C-3925)

**076 164 6579**

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(5568)

**076 889 1308**
**077 839 3974**

## வேலையாள் தேவை

கைதடியில் உள்ள தோட்டக்காணி பராமரிப்பதற்கு நம்பிக்கையும் முயற்சியும் கொண்ட தனிநபர்/குடும்பமாக தங்கி இருந்தும் வேலை செய்யலாம்.

தொடர்புக்கு

**076 470 6831**

(1570)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வலிகாமம் வடக்கு மாவிட்டபுரம் வள்ளுவர் சனசமூக நிலையத்தில் திருவள்ளுவர் சிலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அஜித்குமாரின் தாயினுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு கருங்கல்லினாலான வள்ளுவர் சிலையே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (படம்: கஜிந்தன்)



யாழ்.வலயக்கல்வி அலுவலகம் நல்லூர்க் கோட்ட முன்பள்ளிகளின் கண்காட்சியும் வர்ணஜால நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.



வவுனியா விபுலாநந்தா கல்லூரியின் கல்வி மற்றும் பௌதீக வள தேவைக்கு நிதி திரட்டும் முகமாக பழைய மாணவர் சங்கம் நடத்தும் திண்டுக்கல் லியோனியின் "பாட்டுமன்றம்" நிகழ்வுக்கான முதலாவது டிக்கெட்டினை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்:வசந்தரூபன்)



கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் நிகழ்த்தியநேர்காணல்களின் தொகுப்பு "வேர் முகங்கள்" என்ற பெயரில் கடந்த 14 ஆம் திகதி நூலாக வெளியிடப்பட்டது. (படம்: சிவசாந்தன்)



துன்னாலை வடக்கு சதா சகாய மாதா ஆலய வருடாந்த திருநாளின் இறுதி நாள் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்: மகாலிங்கம்)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் கடந்த 16 ஆம் திகதி நெல்லியடி துன்னாலை வீதியில் 100 மரக்கன்றுகளும் நெல்லியடி-கொடிகாமம் வீதியின் முள்ளிப்பகுதியில் 1000 மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. (படம்: மகாலிங்கம்)



சித்தங்கேணி சிறிகணேசா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்: கஜிந்தன்)



மூத்த சுயாதீன ஊடகவியலாளரும், எழுத்தாளருமான கணபதி சர்வானந்தா எழுதிய "இவர்கள் மகாத்மாக்கள் " நூலின் அறிமுக விழா கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (படம்:ரவிசாந்)



வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தின் ஆரம்ப நாளில் யா/கம்பர்மலை வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், யா/கம்பர்மலை வித்தியாலயத்தின் அதிபர் , சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தார்கள். (படம்: மகாலிங்கம்)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தில் "மறுமலர்ச்சி நகரம்" எனும் தொனிப்பொருளில் மரநடுகை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்:சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் நீண்டகாலமாக இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

குறிப்பாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யப்படுகின்ற வத்தகை, நிலக்கடலை, சோளம் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமலுள்ளதால் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகி வருவதாக தெரிவித்துள்ளனர்.



அதேவேளை குறித்த பகுதிகளில் தற்போது இருபது விவசாயிகள் 20 ஏக்கருக்கும் மேல் சோளப்பயிற்செய்கை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட சோளத்தினையும் விவசாயிகளால் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தமது பாதிப்பு நிலை உணர்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மால் உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு உரிய வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# உலக சமாதான தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நடைபவனி

(தருமபுரம்)

சமாதானத்திற்கான நடைபவனி நேற்று கிளிநொச்சியில் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டது. செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அனுசரணையுடன் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 இளைஞர்களின் சமாதானம் தொடர்பாக பயிற்சியூட்டப்பட்டு அவர்களால் உலக சமாதான தினத்தை முன்னிட்டு ஒரு நடைபவனி திட்டமிடப்பட்டது

குறித்த நடைபயணம் ஆனது உலக சமாதான தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் 9 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து அமைதி வழியாக ஆரம்பமாகி கிளிநொச்சி பேருந்து நிலையம் வரை தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களால் பல்வேறு பட்ட சமாதான எண்ணக்கரு தாங்கிய பதாகைகள் ஏந்திய வண்ணம் நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது.

இவ் நடைபயணத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், மத குருமார்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8-316)




# கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் உயர்தர சான்றிதழ் 2005/2006 (Advanced Certificate in Social Science) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தரம் 9 இனைப் பூர்த்திசெய் திருத்தல் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படி வங்களை www.owc.lk என் னும் இணையத்தின் முகவரி யில் பிரவேசித்து 30.09. 2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானமானி (Bachelor of Social Sciences) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்வி பொதுத் தராதர உயர்தரத்தில் ஏதேனும் துறையில் 3 பாடச்சித்தியினையும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான புலத்தில் NVQ மட்டம் 4இல் சித்தி அடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமமான அல்லது தகைமைகள் கொண்டிருக்க வேண்டும் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் விண்ணப்பப்படிவத்தினை www. nts.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 30.09.2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் 021-2223374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடி



## சக்கரமாய் அமர்ந்திருக்கும் வல்லிபுர மாயோனே...!!

எண்ணரிய அலங்கார நெடுமுடியும்
ஏந்திடும் சுதர்சனப் பேராயுதமும்
பண்ணெனவே நாதமெனும் ஓசைதரும்
பகர்வெள்ளைப் பாஞ்ச சன்னியமும்
கண்ணிலுலா காந்த அருளொளியும்
காதிலொளிர் குண்டல வசீகரமும்
புன்னகையைப் புரிகின்ற முகவழகும்
புதுமையெனும் அலங்கார அணிகலமும்
புனைந்தவுன் வடிவமெலாம் உள்ளடக்கிப்
புதிராக அரவுதரும் நிழலதனில்.
சினந்தெழும் அலையது சிரந்தத்தும்
கீழ்கடலின் கரையினிலே இடங்கொண்டு
நினைந்துவரும் உன்னயொர் காண்பதற்கோ
நின்றொளிரும் சக்கரமாய் நீயமர்ந்தாய்!
பணிந்திடும் பக்தருக் கருளுகின்ற
பரம்பொருளே வல்லிபரக் கண்ணபெருமானே...!

**இரா.தில்லைராஜன்**

## அரிராமா கொடியேறு

அன்னதானம் எங்கும் பெருகிட அரிராமா கொடியேறு
ஆலயம் தொழுது சாலவும் நன்றெனக் கொடியேறு
இதம் தரும் வாழ்வு நிலைபெற எண்ணிக் கொடியேறு
ஈதல் இசைபெற வாழ்வோர் பெருகிடக் கொடியேறு
உலாவரும் கொடிச்சீலை உயர்ந்திடும் வண்ணம் கொடியேறு
ஊரெங்கும் ஆள வந்த உத்தமனே ராமா கொடியேறு
எண்ணித் துணிக கரும்மென் றேதிடக் கொடியேறு
ஏகன் அடியே என்னும் துணையெனக் கொடியேறு
ஐயம் செய் கிருகைகள் அபிவிருத்தி காணக் கொடியேறு
ஒப்புவமை யாரும் இல்லாத இறைவனே கொடியேறு
ஓதும் மறைகள் யாவும் இறைவன் மாட்டேஎனக் கொடியேறு
மவுனமொடு நின்றெம் துயர்தன் தீர்த்திடக் கொடியேறு

**கலாபூசணம் மு. தனிகாசலம், கற்கோவளம்.**

## ஆழ்வாரின் கொடியேறும் நாளின்று

வெண்மலராய் நாற்றிசையும் வெண்மலரும் அழகொளிர
வல்லமையால் வினைதீர்க்கும் வல்லிபுர ஆழ்வாரின்
வண்ணமுறு ஆலயத்து வர்ண கொடிதானும்
வையகம் விடியலிலே கொடியேறும் நாளின்று
வெண்சங்க சல்லாரி விண்ணதிரும் மணியொலிக்க
வணங்கும் அடியவரின் விழிதானும் நீர் பனிக்கும்
பண்ணிசையும் கூடமுடன் பூங்கொத்து நறுமணமும்
பேறாகும் இந்நாள் தரிசனமோ கோடிபெறும்

**கலாபூசணம் கே. ஆர். திருத்துவராஜா**

# விளக்கமறியல் நீடிப்பு

(அராலி)

கடந்த மாதம் 13ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 7 இராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13 ஆம் திகதி நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட 7 தமிழக மீனவர்களும் கடந்த வியாழக்கிழமை யாழ். ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போதே இவர்களது விளக்க மறியல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.(8-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி

# மோகனதாஸ் வெற்றிக் கிண்ணம் ஆவரங்கால் மத்தி வசம்



யாழ்ப்பாணம் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 2025ஆம் ஆண்டுக்கான 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை மாலை மோகனதாஸ் விளையாட்டு மைதா னத்தில் நடைபெற்றது.

கடந்த வாரம் ஆரம்பமான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 15இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றி போட்டியிட்டிருந்த நிலையில் இறுதி போட்டிக்கு கே.கே.எஸ் அணியும் ஆவரங்கால் மத்தி விளையாட்டு கழகமும் தெரிவாகியிருந்தது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் தொடர்ச்சியாக மூன்று சுற்றுக்களிலும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (3-104)

## ஆசியக்கிண்ண கிரிக்கெட்

# ஓமானை வீழ்த்தி இந்தியா வெற்றி




அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - ஓமான் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவரில் 8 விக்கெட்டை இழந்து 188 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக சஞ்சு சாம்சன் 56 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து 189ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற ஓமன் அணி களம் கண்டது. ஓமனின் தொடக்க வீரர்களாக ஜதிந்தர் சிங் மற்றும் ஆமிர் கலீம் களம் கண்டனர். இதில் ஜதிந்தர் சிங் 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹம்மாத் மிர்சா களம் கண்டார். ஹம்மாத் மிர்சா - ஆமிர் கலீம் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தது.

அபாரமாக ஆடிய இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். இதில் ஆமிர் கலீம் 64 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதியில் ஓமன் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டை இழந்து 167 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 21 ஓட்ட வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்று ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. (3)

# உசைன் போல்ட்டின் சாதனையை சமன் செய்த நோவா லைல்ஸ்




உசைன் போல்ட்டின் சாதனையை அமெரிக்காவைச் சேர்ந்த நோவா லைல்ஸ் சமன் செய்துள்ளார்.

உலக தடகள சம்பியன்ஷிப் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தொடர்ச்சியாக 4 முறை தங்கம் வென்ற உசைன் போல்ட்டின் சாதனையை நோவா லைல்ஸ் சமன் செய்துள்ளார்.

டோக்கியோவில் நடைபெற்றுவரும் உலக தடகள சம்பியன்ஷிப் தொடரின் போட்டியில் 19.52 நொடிகளில் இலக்கை எட்டினார் நோவா லைல்ஸ்.

2009, 2011, 2013, 2015 ஆம் ஆண்டுகளில் உசைன் போல்ட் தங்கம் வென்றதை போன்று 2019, 2022, 2023, 2025 ஆம் ஆண்டுகளில் நோவா லைல்ஸும் தங்கம் வென்றுள்ளார். (3)

# தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் மீண்டும் அணியில் இணைந்த துனித



ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் லீக் சுற்று முடிவில் “ஏ” பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், “பி” பிரிவில் இலங்கை, பங்களாதேஷ் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு தகுதி பெற்றன. சூப்பர்4 சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும்.

இதன் முடிவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குள் நுழையும். சூப்பர்4 சுற்று நேற்று ஆரம்பமாகியது. இதன் முதல் ஆட்டத்தில் இலங்கை- பங்களாதேஷ் அணிகள் மோதின.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை இரவு நடந்த லீக் ஆட்டத்தில் இலங்கை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை தோற்கடித்து சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறியது.

இந்த ஆட்டம் நடந்து கொண்டிருந்தபோது இலங்கை சுழற்பந்து வீச்சாளர் துனித் வெல்லாலகேவின் தந்தை சுரங்கா வெல்லாலகே (வயது 54) மாரடைப்பால் மரணம் அடைந்தார். இந்த துயர சம்பவம் குறித்து ஆட்டம் முடிந்ததும், பயிற்சியாளர் ஜெயசூர்யா, துனித் வெல்லாலகேவிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து அவசரமாக தாயகம் திரும்பிய அவர் தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் உடனடியாக டுபாய் கிளம்பி அணியுடன் இணைந்து கொண்டார். துனித் வெல்லாலகேவின் இந்த செயல் ரசிகர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (3)



கிளிநொச்சி பரந்தன் சேவை நிலையத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படம்:- தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

– திருக்குறள்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## தொல்லியல் திணைக்களம் ஓர் இனவாத அமைப்பா?

தொல்லியல் திணைக்களம் ஓர் அரச அமைப்பு. அரச அமைப்பு என்பது பொது அமைப்பு எனப் பொருள்படும்.அதாவது, இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமான அமைப்பாகத் தொல்லியல் திணைக்களம் இருக்க வேண்டும்.

ஆனால் தொல்லியல் திணைக்களம் முப்படை போல தமிழ் மக்களுக்கு எதிரான படையாக இயங்குவதாகவே நம் மக்கள் கருதுகின்றனர்.

இதற்குக் காரணம் கடந்த காலங்களில் தொல்லியல் திணைக்களத்தின் அத்தனை செயற்பாடுகளும் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே அமையப்பெற்றன.

ஆம், முல்லைத்தீவில் குருந்தூர்மலை, வவுனியாவில் வெடுக்குநாறி, திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று என எங்கும் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

மேற்குறித்த இடங்கள் தமிழ் மக்களினதும் சைவ சமயத்தினதும் வரலாற்றுச் சான்றுகளாக இருந்தபோதிலும் அவற்றைப் பௌத்தத்தின் தொல்லியல் இடங்களாக அடையாளப்படுத்தி, நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்தது முதல் குறித்த இடங்களில் சைவ மக்கள் வழிபடுவதற்கும் பொங்கல் செய்வதற்கும் தடையும் நிபந்தனையும் விதித்ததை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள்.

சுருங்கக்கூறின் பேரினவாத ஆட்சியாளர்களின் தமிழின விரோதச் செயல்களை முன்னெடுத்துச் செல்லுகின்ற ஓர் அமைப்பாகவே தொல்லியல் திணைக்களத்தைத் தமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

இதை இன்னும் தெளிவுரைப்பதாயின், கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான ஓர் அமைப்பாகவே தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் இருந்தன.

உண்மையில் தமிழ் மக்களுக்கு ஆன அரசியல் தலைமை இருக்குமாயின், இந்த நாட்டின் இனவாத அமைப்பாகவும் தமிழ் மக்களுக்கு விரோதமான திணைக்களமாகவும் செயற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் தொல்லியல் திணைக்களத்தை நீதிமன்றில் நிறுத்தியிருக்க முடியும்.

என்ன செய்வது, சுயநலம் மிக்க எங்கள் தமிழ் அரசியலால் எதுவும் செய்ய முடியாதென்பதால், இனவாத அமைப்புகள் தப்பிப் பிழைத்துள்ளன.

தவிர, தமிழர்களின் வரலாற்றுத் தொன்மை மிக்க வழிபாட்டு இடங்களைப் பௌத்த சின்னங்களாக அடையாளப்படுத்திய தொல்லியல் திணைக்களம் தமிழ் மன்னன் சங்கிலியனின் மந்திரி மனையை, ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டதில் இருந்து அந்த அமைப்பின் இனவாதப்போக்குத் தெரிகிறதல்லவா.

ஆம்,நல்லூர் இராசதானிக்குரிய மந்திரி மனையின் ஒருபகுதி உடைந்து விழுந்தது என்ற செய்தி தமிழ் மக்களுக்கு தொல்லியல் திணைக்களம் வழங்கிய இனவாத அன்பளிப்பாகும்.

என்ன செய்வது ஆகக் குறைந்தது மந்திரி மனையைக் கூட காப்பாற்ற முடியாத அளவில் தொல்லியல் திணைக்களத்தின் இனவாதம் முற்றிப்பழுத்துள்ளது.

இதுபற்றி இன்றைய ஆட்சியாளர்களாவது சிந்திக்க வேண்டும். வேதனைப்படுகின்ற தமிழ் மக்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஜனாதிபதி அநுரவின் போக்கு ஹிட்லரின் போக்குக்கு சமன்

## வசைபாடும் உதய கம்மன்பில

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜேர்மனியின் அடால்ஃப் ஹிட்லரின் மறுபிறவியா? என சந்தேகம் எழுவதாகப் பிவித்துருஹெல உறுமயத் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79வது ஆண்டு விழாவில் உரையாற்றிய போதே அவர் இந்தச் சந்தேகத்தை வெளியிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் தாயகத்தின் துரதிர்ஷ்டவசமான பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி தனது 79வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இந்த பாசிஸ்டுகள் ஆயுதங்களுடன் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றபோது, நாங்கள் அதை எதிர்கொண்டோம்.

ஆயுதம் ஏந்திய பாசிஸ்டுகளை அடக்குவதற்கு போர்வீரர்களுக்கு சட்டபூர்வமான உரிமை இருந்தது.

இப்போது அவர்கள் தேசபக்தி உடைகளை அணிந்து, சோசலிச முகமூடிகளை அணிந்து நாங்கள் ஆட்சியைப் பிடித்த போது அது எங்களுக்கு ஒரு விசித்திரமான அனுபவமாக இருந்தது.

அடோல்ஃப் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்ததற்கும் அநுர திஸாநாயக்க அதிகாரத்திற்கு வந்ததற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை உள்ளது.

இந்த நாட்டிற்கு என்ன நடக்கும் என்பது நிச்சயமற்ற ஒரு தருணம். இது ஜனாதிபதி தொழிற்சங்கத் தலைவர்களை அச்சுறுத்தும் போது, ஹிட்லரின் ஜேர்மனியே எமது நினைவுக்கு வருகின்றது.

அடோல்ஃப் ஹிட்லரின் மறுபிறவியா? ஜனாதிபதி என்று நியாயமான சந்தேகத்தை எழுப்பும் வகையில் அநுர குமார திஸாநாயக்க செயற்படுகிறார் என்றார்.

(ம-7)

# விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற வாகனம் மீட்பு

## இருவர் கைது

(வவுனியா)

கனகராயன்குளம் பகுதியில் விபத்தை எற்படுத்திவிட்டு தப்பிச்சென்றிருந்த வாகனம் வவுனியா மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் கடந்த 16 ஆம் திகதி இரவு ஏ-9 வீதியில் பயணித்தவேளை வாகனம் ஒன்று அவரை மோதியதில் படுகாயமடைந்த அவர் உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் நிறுத்தா மல் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தது.

இது தொடர்பாக தீவிர விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசுவமடுப் பகுதியில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் நிறம் உட்பட ஏனைய அமைப்புக்களை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை சாரதி மற்றும் உரிமையாளர் ஆகியோரைக் கைது செய்தனர். (ம-7)

# மட்டு. மாவட்ட முன்னாள் எம்.பி கனகசபை காலமானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தன்மன்பிள்ளை கனகசபை தனது 86 வது வயதில் வயது மூப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

தமிழ்த்தேசியத்தின் தீவிர பற்றாளராய் இருந்து தமிழ்த் தேசியப் பரப்பில் பயணித்த இவர் 2004 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# யாழ். இந்துக் கல்லூரியில் குருதிக் கொடை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஒவ்வொரு வருடமும் சிறப்புற முன்னெடுக்கப்படும் குருதிக் கொடை நிகழ்வானது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே உதிரம் கொடுத்து உயிர் காக்கும் இவ் உன்னதப் பணியில் ஒன்றிணைந்து பணியாற்றிட வருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 இந்திய மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த ஜூன் மாதம் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இந்திய இழுவைப் படகு ஒன்றையும் அதிலிருந்து 5 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

பின்னர் குறித்த மீனவர்களையும் இழுவைப் படகையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 5 மீனவர்களையும் இம்மாதம் 26 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (8-285)

# கஞ்சா மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சியில் கைவிடப்பட்ட வீடொன்றுக்கு அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த 18.5 கிலோ கேரளக் கஞ்சா பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தருமபுரம் பகுதியில் நேற்று கிளிநொச்சி பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட தீவிர சோதனையின் போதே, குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்குக் கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்குக் கீழ்க்காணும் பணியாளர்கள் தேவை.



1) Administration
2) Computer Billing + Cashier
3) Sales Assistant
4) Packing - பொதியிடல்
5) Part time 5.00 Pm to 10.00 Pm

வயது எல்லை : 18 - 35

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(5479)

தொலைபேசி இல.

**077 419 5809, 077 419 5218**



# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1990இல் பிறந்த, மிருகசீரிடம், முகாமைத்துவப் பட்டதாரி, பட்டயக் கணக்காளர் மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை.

தொலைத் தொடர்பு

**077 074 5206**

(5477)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


# அயலக ஆளுமைகளுக்கு அலங்காரம்



BMICH இல் தமிழ்நாடு அரசின் "தகைசால் தமிழர்" விருது பெற்ற இந்திய முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் K.M. காதர் மொஹிதீன் அவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இசை முரசு மர்ஹூம் நாகூர் E.M. ஹனீபா அவர்களின் பிறந்த நூற்றாண்டு நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்ற நிகழ்வில் இந்திய முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் பேராசிரியர் K.M. காதர் மொஹிதீன் அவர்களை கௌரவித்து கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்த போது எடுத்த படம். அருகில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் கௌரவ சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம் M.P. அவர்களும் காணப்படுகிறார்.

(C-3923)


## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



## மஹாளய பூர்த்தி உற்சவ விஞ்ஞாபனம்

21.09.2025 ஞாயிற்றுக்கிழமை

நேசம் நிறைந்த நெஞ்சத்தீர்!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்கார வேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் மஹாளய பூர்த்தி நாள் வழிபாடு இன்று சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**உற்சவ விபரம்**

**கும்ப பூஜை** காலை 10.30 மணி
**மூலஸ்தான பூஜை** நண்பகல் 12.00 மணி
தொடர்ந்து **சிரார்த்த வழிபாடு** நிறைவடைந்து

**அன்னதானம் ஆரம்பமாகும்**

இன்று 21.09.2025 ஆம் திகதியன்று சர்வலோகத்திலும் இயற்கை அனர்த்தங்கள் யுத்தத்தினால் காவுகொள்ளப்பட்ட உயிர்களின் ஆத்மா சாந்தி வேண்டி அதிகாலை 5 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். தொடர்ந்து 10.30 மணிக்கு ருத்ர ஹோம பூஜையும் நடைபெற்று விசேடபூஜை வழிபாடுகளின் பின்னர் சிரார்த்த வழிபாடு நடைபெறும். சிரார்த்த வழிபாடு நிறைவடைந்ததும் அன்னதானம் வழங்கப்படும். அதிகாலை 5 மணியிலிருந்து மாலை 6 மணி வரை அடியவர்கள் மூதாதையர்களுக்கான தர்ப்பண வழிபாடு செய்துகொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**உபயம் : திரு.செல்வழகன் ஸ்ரீ பாமினி குடும்பம்**
**(சுவிஸ்)**

குறிப்பு:- 22.09.2025 ஆம் திகதி முதல் 01.10.2025 ஆம் திகதி வரை மாலை 5.30 மணிக்கு நவராத்திரி பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று இரவு 8.00 மணிக்கு பூஜை நிறைவடைந்ததும் இரவு உணவு தானம் வழங்கப்படும்.


"தெளிவே என் சிந்தனை"

இங்ஙனம் - **கௌரவ கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
முதன்மை பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

(C-3930)


# மரண அறிவித்தல்

தாயின் மடியில் 06 - 07 - 1935



இறைவன் அடியில் 20 - 09 - 2025

வைத்திய கலாநிதி

## மயில்வாகனம் மகேசன்

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி – நாயபெத்த, பண்டாரவளை, அகில இலங்கை சமாதான நீதவான்)

உடுவில் கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகேசன் அவர்கள் நேற்று (20.09.2025) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம், களுபோவில வைத்தியசாலை - கொழும்பு) அவர்களின் பாசமிகு கணவரும் தயாளினி, Dr.தீனதயாளன், தயாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிமலன், Dr.அனுராதா, தனுசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரணன், ஆரணன், அவதாரணன், தீரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (புஸ்பக்கா), மகேந்திரன் (மகம் அண்ணா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற செல்வராசா (சித்தியார்) மற்றும் கலாரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும் யுவீந்திரா - ரமணி ஆகியோரின் பாசமிகு பெரிய மாமனாரும் மற்றும் ஆதவன் - நிலானி, துளசி - இராகுலராஜ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :*
குடும்பத்தினர்
021 224 0054
தீனதயாளன் - 077 376 8917
தயாகரன் - 077 298 0579

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(1573)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உரையாற்றவுள்ளார்.

ஐ.நா. வெளியிட்ட திருத்தப்பட்ட தற்காலிக பேச்சாளர்களின் பட்டியலின்படி குறித்த தினத்தில் ஜனாதிபதி பிற்பகல் அமர்வில் உரையாற்றவுள்ளார். (ம-7)

## வல்லிபுர...

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 04ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 06ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## எஜமானைக்...

கச் சென்று பார்வையிட்ட சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (19) மாலை வைத்தியசாலை விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட அனுமதிக்கப்படும் நேரத்தில் தனது எஜமான் தங்கியிருந்த 24ஆம் இலக்க விடுதிக்குச் சென்று அவரைப் பார்வையிட்டுத் தனது ஆழ்ந்த விசுவாசத்தை வெளிப்படுத்திவிட்டு குறித்த நன்றியுள்ள ஜீவன் வெளியேறிச் சென்றுள்ளது. (ம-7)

## பேராசிரியராக...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் நா.பிரதீபராஜா பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பிரதீபராஜா பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7)

## சர்வதேச...

பட்டுள்ளன.

T - 56 ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஊர்காவற்றுறை நீதிமன்ற அனுமதியுடன் அதனை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ம-7)

## போதை...

கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## ஈழத் தமிழர்...

கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற அரசியல் சுற்றுப் பயண பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பு மட்டுமல்ல, இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது எமது கடமை எனக் குறிப்பிட்டார்.

மேலும் எமது தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்கள் உலகத்தில் எங்கு இருந்தாலும் தாயின் அன்பைக் காட்டிய தலைவனை இழந்த அவர்களுக்காகவும் குரல் கொடுப்பதும் எமது கடமை எனத் தெரிவித்தார்.

அத்தோடு இந்தியக் கடற்றொழிலாளர்களின் உயிர் எவ்வளவு முக்கியமோ அதே அளவு ஈழத்தமிழர்களின் கனவுகளும் அவர்களது வாழ்க்கையும் மிக முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## அனைத்து...

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டுவிழா கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இந்த விழாவில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது நாட்டில் நீண்டகாலமாகப் பல கட்சி ஆட்சி முறை உள்ளது. அதனை ஒழிக்க இந்த அரசு முற்படுகின்றது. அதற்கு இடமளிக்க முடியாது. அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தருணம் இது.

என்னைக் கைது செய்வதன் ஊடாக எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தப் பார்க்கின்றனர். இதற்கு நாம் அச்சப்படக் கூடாது.

நான் ஜனாதிபதிப் பதவியில் இருந்த காலத்தில் எனது மனைவியான பேராசிரியர் மைத்திரி விக்கிரம சிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்தமைக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாக என் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால் நான் லண்டன் சென்றது உத்தியோகபூர்வ பயணம் ஆகும். இதனை நான் நிரூபித்தும் அவர்கள் என்னைக் கைது செய்தனர்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முதலில் ஆரம்பித்தது நாங்கள்தான்.

ஆனால், போலிக் குற்றச்சாட்டுக்களின் கீழ் மோசடியான முறையில் அரசியல் தலைவர்களைக் கைது செய்ய நாங்கள் விடமாட்டோம். அதற்கு எதிராக நாங்கள் போராடுவோம்.

நாங்கள் பயப்படவில்லை. நாங்கள் பயந்து ஒதுங்குவோம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

மோசடியான முறையில் அரசியல் தலைவர்களைக் கைது செய்யமுயன்றால் நாங்கள் ஒன்றிணைந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம். எந்தவொரு சவால்களுக்கும் முகம் கொடுக்க நாங்கள் தயார்." என்றார். (ம-7)

## திலீபனின்...

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எதிர்காலச் சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் "பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!" எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் நேற்றுச் சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலரஞ்சலி செலுத்தப்பட்டு வரலாற்று ஆவணக் காட்சியகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தியாகதீபம் திலீபனின் வரலாற்றுப் புகைப்படங்கள், பத்திரிகை ஆவணங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,33)


மஹஜன சம்பத — திகதி 2025.09.20 — சீட்டிழுப்பு இலக்கம் 5958 — Y 9 9 8 3 3 1
அத சம்பத — Y 8 3 3 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0533

சுப தவசக் — திகதி 2025.09.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0874 — துலாம் 05 09 26 36

தன நிதானய — திகதி - 2025.09.20 — சீட்டிழுப்பு இலக்கம் - 1988 — Y 15 54 55 61 Y

மெகா பவர் — திகதி 20/09/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2306 — A 20 06 09 52 58

ஜய — திகதி 2025.09.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0226 — O 6 6 6 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4200 — சீட்டிழுப்பு திகதி 20.09.2025 — T 06 07 49 72 — T

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.09.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1267 — மீனம் 05 08 15 51 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 20.09.2025 — வெற்றி வாரம் 0666 — D — 4 1 9 3 9 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,666,000.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2932 — சீட்டிழுப்பு திகதி 2025.09.20 — தினம் சனிக்கிழமை — 26 45 48 73 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,196,543.20

சனிதா — திகதி 20.09.2025 — வெற்றி வாரம் 5093 — 39 41 61 76 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,617,033.60

சசிரி — வெற்றி வாரம் 0774 — சீட்டிழுப்பு திகதி 20.09.2025 — சனிக்கிழமை — 16 23 43 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4644 — சீட்டிழுப்பு திகதி 20.09.2025 — தினம் சனிக்கிழமை — 02 19 20 43 தனுசு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — D 05 21 41 51 69 — 2108 — 20.09.2025 சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.595,158,305.80

அத கோட்டிபதி — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2758 — சீட்டிழுப்பு திகதி 2025.09.20 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,792,438.40 — 15 29 65 75 F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

idp

# EXPO 2025

## UK, Canada & USA

40+ Institutes Under One Roof



25th September | 11 AM – 4 PM | The Thinnai Hotel, Jaffna

27th September | 11 AM – 4 PM | Taj Samudra Hotel, Colombo

(K-285)

# காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன் யாழ். மாநகர சபை முன் வீதி
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m
- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 3 கோடி (மூன்று கோடி)
- நல்ல சுற்றுச்சூழல்
- அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளன.

(5446)

தொடர்புகளுக்கு :

**077 468 3354, 077 288 0152**

**076 860 2770**

**Golden Real Estate (Pvt) Ltd**

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 172/= | |
| 5Kg Prima கோதுமை மா | - 950/= | ~~1150/=~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 310/= | Max 3Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 188/= | |
| 1Kg அவல் | - 310/= | |
| 1Kg கடலை | - 375/= | |
| 1Kg சர்க்கரை | - 255/= | |
| 1Kg கடலைப்பருப்பு | - 320/= | |
| 100g கற்கண்டு | - 35/= | |
| 100g கச்சான் முத்து | - 110/= | |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 135/= | ~~150/=~~ |
| 01 பெட்டி கற்பூரம் | - 280/= | ~~370/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 140/= | ~~240/=~~ |

400g Anchor ~~1200~~ **1140**

1Kg சன்லைட் பவுடர் ~~320~~ **280**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(1574)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

# வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு (Computer Billing) செய்யக்கூடியவர்கள் - பழக விரும்புபவர்கள் தேவை.

தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**ஆண்கள் மட்டும்**

- தகைமை : அடிப்படை கணனி அறிவு அவசியம்
- வயதெல்லை : 20 – 30 வரை

(5361)

**070 401 6775**

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970

(5158)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா... ரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.